ESPLANADE BRANCH, MADRAS.

பதிவு எண் 2041. மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று

105





| | ரூ. அ. |
|---|---|
| வருட சந்தா ... ... ... | 3—0 |
| 6 மாத சந்தா ... ... ... | 1-12 |

[வாரப்பதிப்பு.]

ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

| | ரூ. அ. |
|---|---|
| வெளி நாட்டிற்கு சந்தா ... | 4—0 |
| விளம்பரம் அங்குலம் 1-க்கு ... | 0—8 |

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-ஹு ஆவணி-மீ 13-உ (29—8—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 18.



## உண்மையான கதர்

கெட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடுகாங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன்,
காங்கிரஸ் கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,
ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

## கதர்! கதர்!! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்
அத்தாக்ஷி பத்திரம் பெற்ற

### சுத்த கதர் ஜவுளிகள்.

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், அச்சு துண்டுகள், பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,
A. முருகேச முதலி.
No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

## காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்தகதர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
ஊத்துக்குளி S. I. Ry.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்.

1916-ஹு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்ட்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதரூஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதரூஸ்.

## திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை.

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

## சென்னை நகரபரிபாலன சபையின் உபாத்திமைச் சங்கம்.

### பார்ப்பனர்களின் தந்திரம் பலிக்கவில்லை.

31—7—26 ஷை உபாத்திமைச் சங்கம் சேபாக்கத்திலுள்ள பெல்ஸ் ரோட் கார்ப்பரேஷன் பள்ளிக்கூடத்தில் வெகு குழப்பத்துடன் நடைபெற்றது. திரு. சிங்காரவேலு செட்டியார் அக்கிராசனம் வகித்தார். ஆனால் அன்னாரை எவரும் அக்கிராசனாதிபதியாகப் பிரேரேபித்தலோ ஆதரித்தலோ ஒன்றும் இன்றி மேடையில் ஏறி அமர்ந்தார். ஒரு பார்ப்பன உபாத்தியாயரால் கடவுள் வணக்கம் ஆயிற்று, நடவடிக்கை ஆரம்பிக்குமுன் ஒரு முகமறிய உபாத்தியாயர் இந்த மீட்டிங்கு இன்றைக்கு நடைபெறலாகாதென்றும் சட்டப்படி ஒரு வாரத்திற்கு முன் தகவல் யாருக்கும் கொடுக்கவில்லையென்றும் வழக்கப்படி சிந்தாதிரிப்பேட்டை, பள்ளியில் கூட்டங்கள் நடப்பதை விட்டு இங்கு வைத்திருப்பதின் நோக்கம் புலப்படவில்லையென்றும் ஆகையினால் மீட்டிங்கை ஒத்திவைக்க வேண்டுமென்றும் ஒரு பிரேரேபணை கொண்டுவர அதை அநேகம் பேர் ஆதரித்தும், காங்கிரஸ் போர்வையைப் போத்திருக்கும் திரு. செட்டியார் முடியாதென்றும் இன்று நடந்துதான் ஆகவேண்டுமென்றும் ஒரே பிடிவாதத்துடன் நடத்தினார். விஷயம்:—ஆபிஸ் உத்தியோகஸ்தரைத் தேர்ந்தெடுத்தல்; 1. அக்கிராசனாதிபதி 2. உப அக்கிராசனாதிபதி, 3. காரியஸ்தர், 4. பொக்கிஷதார், 5. கமிட்டி மெம்பர்கள். இதில் போலி காங்கிரஸ் வாதியாகிய திரு. செட்டியார் தானே அக்கிராசனாதிபதியாயும், ஒரு பார்ப்பனன், உப அக்கிராசனாதிபதியாயும், இன்னும் 2 பார்ப்பனர்கள் முறையே காரியஸ்தர் பொக்கிஷதாராய் இருக்கவும் முந்திய ஒரு சில பார்ப்பன உபாத்தியாயர்களுடன் ரகசியமாக ஏற்பாடு செய்து வழக்கம்போல் சிந்தாதிரிப் பேட்டையில் நடத்தாமல் சேபாக்கத்தில் நடத்தினால் பார்ப்பன மெஜாரிட்டியே ஜாஸ்தியாயிருக்குமென்றும் நடுநகரத்தில் வைத்தால் எல்லா பிராமணரல்லாதாரும் வந்து கூடிவிட்டால் திரு. செட்டியாரையும், பார்ப்பனரையும் ஆதரிக்க மாட்டார்களென்றும் தந்திரத்துடன் நடத்தப்பட்டது. முதலில் எஸ். விஸ்வநாதய்யர் என்ற ஒரு பிராமணன் நான் திரு. செட்டியாரை நம்முடைய சங்கத்திற்கு 1926—27-க்கு அக்கிராசனாதிபதியாக பிரேரேபிக்கிறேன் என்றவுடன் இன்னொரு பார்ப்பனரால் ஆமோதிக்கப்பட்டு மற்றொரு பார்ப்பனரால் ஆதரிக்கப்பட்டு நிறைவேறும் போது அநேக பிராமணரல்லாதாரால் அது தடை செய்யப்பட்டு 4 பேர்களுடைய பெயரை பிரேரேபிக்கப்பட்டது 1. திவான் பகதூர் ஓ. தணிகாசலம் செட்டி 2. திரு. சிங்காரவேலு செட்டி, 3. திவான் பகதூர் ஜெ. வெங்கடநாராயணு, 3. திரு. ஆர். ஜனார்த்தனம் நாயுடு இவர்களுடைய பெயர்களை சில பிராமணரல்லாதாரால் பிரேரேபிக்கப்பட்டு கணக்கில்லாத பார்ப்பனரல்லாதாரால் ஆதரிக்கப்பட்டும் நிராகரிக்கப்பட்டது. திரு. சிங்காரவேலு செட்டியாரால் இதற்குள் ஒரு பிராமணனல்லாதான் உபாத்தியாயர்களுக்குள்ளேயே ஒரு அக்கிராசனாதிபதியும், காரியஸ்தரும், கமிட்டி மெம்பர்களும் இருக்க வேண்டுமென்று சொன்னவுடன் திரு. செட்டியாருக்கும் ஒரு சில பிராமண உபாத்தியாயர்களுக்கும் கோபம் வந்துவிட்டது. பிராமணரல்லாதார் பேரில் சீறி விழுந்தார் செட்டியார்; பல்லை நறநறவெனக் கடித்தார். என்ன செய்வார் பாவம்! அநேகம் பேர்கள் அதாவது 300 உபாத்தியாயர்கள் (பிராமணரல்லாதார்) வெளியில் வந்துவிட்டனர். பார்ப்பன சூழ்ச்சியில் அகப்பட்ட செட்டியார் விழித்துக் கொண்டே உட்கார்ந்திருந்தார். எண்ணிக்கையற்ற ஆசீர்வாத பாணங்களை சாமாரியாக வாங்கிக் கொண்டார். ஒரு உபாத்தியாயர் "குடி அரசு" இதழ்கள் சுமார் நான்கை கையில் எடுத்துக் கொண்டு மேடையண்டை போய், "செட்டியாரே! இந்த இதழ்களை வாசியுங்கள். பார்ப்பனர்கள் சூழ்ச்சிகள் நன்கு விளங்கும். இன்றைக்கு உங்களை அக்கிராசனாதிபதியாக்குவார்கள். நாளை உங்களுடைய தலையிலேயே பார்ப்பனன் ஏறி உட்காருவான்" என்றவுடன் செட்டியார் பாடு அம்பலமாகி விட்டது. இதற்குள்ளாக வந்திருந்த சுமார் 500 உபாத்தியாயர்களுக்குள் 400 பிராமணரல்லாதார்கள் வெளிப்போந்தார். மீதம் இருந்தவர் பார்ப்பனரே மீட்டிங்கு கடைசியில் நடைபெறவில்லை. ரோட்டிற்குள் வந்தவுடன் ஒரு விசேஷ சம்பவம் நடந்தது. ஒத்தக்காசு செட்டியாரை ஒரு ரிக்ஷா வண்டியில் போட்டு ஒருவன் இழுத்துவந்தான். அவரை எல்லாரும் சூழ்ந்துகொண்டார்கள். ஐயா! நீங்கள்தான் ஓட்டு வேண்டுமென்று பார்ப்பனர்களின் கால்களைக் கட்டிக்கொண்டு சேவை பண்ணுகிறீர்கள். காங்கிரஸ் போர்வை போர்த்துக் கொண்டவர்கள். உங்களுடைய சகா திரு. சிங்காரவேலு செட்டியார் வருஷக்கணக்காய் காங்கிரஸ் வாதியெனச் சொல்லிக் கொண்டும் இன்னும் பார்ப்பனர்களைப் பூஜித்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் இருவரும் இந்த வேஷம் தரித்துத்தானா சங்கங்களின் அக்கிராசனாதிபதியாய் ஆகவேண்டும். உங்கள் உடம்பில் பிராமணரல்லாதார் ரத்தம் ஓடவில்லையா? ஐயோ உங்களைக் கொடுத்து வைத்த காங்கிரசின் பாக்கியமே பாக்கியம்! என்றார்கள். ஒத்தக்காசு செட்டியார் "நீங்கள் என்னுடைய வீட்டிற்கு வாருங்கள் தகுந்தபடி பதில் சொல்லி சமாதானம் செய்கிறேன்." என்றார். உபாத்தியாயர்கள் நீங்கள் இருவரும் போய் பார்ப்பனர்களுக்குப் பின் மூட்டை சுமந்துகொண்டு திரியுங்கள். நாங்கள் வரவேண்டிய அவசியமில்லை என்றார்கள்.

ஆகையினால் பார்ப்பனரல்லாத என் உபாத்திமைத் தோழர்களே! பார்ப்பனர்களைப்பற்றி எச்சரிக்கையாயிருங்கள். "ஊசி நுழைய இடம் கொடுத்தால் ஒட்டகம் நுழைந்தது" போல் ஆகும். எச்சரிக்கையாயிருங்கள். நீங்கள் எல்லாரும் "குடி அரசு" பத்திரிகையை ஆதரிக்க முன் வாருங்கள். "குடி அரசு" வினால் அநேக நன்மைகள் உண்டாகும். கைமேல் பலன். "குடி அரசு" நீடூழி வாழ்க! எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

ஒரு உபாத்திமைத் தோழன்.

## சேலம் ஜீவகாருண்ய சங்க அறிக்கை. 1925—26.

வழக்கம்போல் இவ்வாண்டும் மாரியம்மன் பண்டிகையின் நிமித்தம் பெருந்தொகையாக மனிதர் வாய்ப்படும் ஏழைப் பிராணிகள் பக்ஷிகளின் உயிர்ப்பிச்சைக்கு மன்றாட சங்கத்தின் பிரசாரம் மும்முரமாக தொடங்கப்பட்டது. நகரில் எல்லா வீதிகளுக்கும் மாரியம்மன் கோவில்களைச் சுற்றியும் சுமார் 1000 வால் போஸ்டர்கள் போடப்பட்டு, 15 விதமான ஒரு லக்ஷம் துண்டு பிரசுரங்களும் ஒவ்வொரு வீடுதோறும் வழங்கப்பட்டன.

பத்திரிகைகளில் வெளியிட்டிருந்த விண்ணப்பத்திற்குப் பெரிதும் கருணை காட்டி இப் பிரசாரத்தில் துணைபுரிந்த நம் சகோதர சங்கங்களுக்கு வாயில்லா ஏழைப் பிராணிகளின் சார்பாக என் மனமார்ந்த வந்தனங்களை சமர்ப்பிக்கின்றேன். ஆரம்ப ஆசிரியர்களும், மாணவர்களும் இத் திருத்தொண்டில் வந்து தங்கள் கடமைகளை ஆற்றியதை நான் என்றும் மறக்கமுடியாது. ஆசிரியர்களுள் ஸ்ரீமான்கள் நம்மாள்வாரய்யர், பொன்னுசாமி அய்யர், எ. ராமலிங்கம் செட்டியார் இவர்கள் காட்டிய நன்றிக்கும் உழைப்பிற்கும் நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன். என் வேண்டுகோளுக்கிணங்கி, தங்கள் சிரமங்களையும் கவனியாது பிரசங்கங்கள் செய்த ஸ்ரீமான்கள் பாகல்பட்டி பி. கே. முத்து வெங்கட்ராமய்யர், சென்னை எஸ். ஆர். பார்த்தசாரதி முதலியார் அவர்களுக்கும் ஆங்காங்கு இடவசதிகளை அனுமதித்த நகர பரிபாலன சபை தலைவர் எஸ். வி. வெங்கடப்ப செட்டியார் அவர்களுக்கும் பிரசங்கங்களில் தலைமை வகித்த கனவான்கள் பலருக்கும் சங்கத்தின் சார்பாக வந்தனங்கள் பல சமர்ப்பிக்கின்றேன். இத் திருத்தொண்டை அன்புடன் ஏற்றுக்கொண்ட சகோதரர்களாகிய எ. வையாபுரி பண்டாரம், சின்னசாமி, மாணிக்கம், பழனியாண்டி பண்டாரம், கந்தசாமி பிள்ளை முதலியவர்களை இங்கு குறிக்காமலிருக்க முடியவில்லை. சங்கத்தின்பால் அன்புகொண்டு அனுதாப கடிதங்கள் எழுதிய வெளியூர் கனவான்களாகிய காரை சிவனடியார் திருக கூட்டத்தார்களுக்கும், "குமரன்" பத்திராதிபர் திருவாளர் சொ. முருகப்ப செட்டியார் அவர்களுக்கும், பெங்களூர் ஜீவகாருண்யச் சங்க காரியதரிசியார் ஸ்ரீமான் ப. வே. சஞ்சீவி அவர்களுக்கும் ஆரம்பத்திலிருந்து சிறிதும் தளர்வின்றி ஒவ்வொரு சமயமும் உதவியும் தைரியமும் தக்க யோசனைகளையும் கூறிவந்த நம் தலைவர் உயர் திருவாளர் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்களுக்கும், நான் என்றும் நன்றியுள்ளவனாயிருக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

இதன் பலனாக, பெருந்தொகையான கொலைகளை (பலி) நிறுத்தமுடியாமற் போனாலும் ஜீவகாருண்ய வளர்ச்சி ஆங்காங்கு அதிகமாய்ப் பரவிவருகிறது. அதுவே நம் வெற்றிக்கு அறிகுறியாகும்.

நடேசன்.

# நம்முடலில் சாக்கடைத் தண்ணீரா ஓடுகின்றது?

எம். கே. ஆச்சாரியாரென்னும் வைதிக பிராமணரின் பெயரைக் கேட்டேனுமிராத தமிழ்மக்கள் இராரென்றே சொல்லலாம். பாஞ்சாலப் படுகொலைஞராகிய ஜெனரல் டயரின் பெயர் எங்ஙனம் ஒவ்வொரு இந்தியருள்ளத்தும் மங்கி மறைந்தொழியாது என்றும் பிரகாசித்துக்கொண்டிருக்குமோ, அங்ஙனமே எம். கே. ஆச்சாரியாரெனும் வைதீக பிராமணரின் பெயரும் ஒவ்வொரு தமிழ் மக்களினுள்ளத்தும் என்றும் மங்கி மறைந்தொழியாது பிரகாசித்துக் கொண்டிருக்குமென்பது நிச்சயம். முன்னம் டாக்டர். பி.வரதராஜுலு நாயுடுகாரால் சமபந்தி சம்பந்தமாய் ஆரம்பிக்கப்பட்ட சேரமாதேவி குருகுல போராட்டத்தின் போது, பிராமணக்குழந்தையுடன், பிராமணரல்லாதகுழந்தை சமபந்தியிலிருந்துண்பதைக் காணநேரிடின் 15-நாள் உண்ணாவிரத மிருப்பேனென்றும், தனது சதையைக் கண்டந்துண்டமாகச் சிதைத்தாலும் அஞ்சாது, தனதுடலில் பிராமண இரத்தம் ஓடிக்கொண்டிருக்கின்றவரை எல்லா வழியாலும் பிராமணர்களைவிட பிராமணரல்லாதார் தாழ்ந்தவர்களே யென்பதை நிலைநாட்டுவதற்காகப் போராடிவருவேனென்றும் வாய்வீரம் பேசியவரே நமது பிரஸ்தாபத்திற்குரிய எம். கே. ஆச்சாரியாராவர். இவ்வாறு குருகுல போராட்டத்தின்போது தலைகால் தெரியாமல் பிராமணரல்லாதாரிடம் பரிந்து பல்லைக்காட்டிக் கெஞ்சி செங்கல்பட்டு தென் ஆற்காடு ஜில்லா ஓட்டர்களின் வாக்குரிமையை (ஓட்டை)ப் பெற்பெற்று இந்திய சட்டசபையில் நுழைந்துவிடலாமெனத் துணிபுகொண்டு முன் வந்திருக்கின்றனர். எவ்வாறுவது, எவரை ஏமாற்றியாவது, எவ்வித பழிபாவத்தைச் செய்தாவது சட்ட சபையுள் நுழைந்துவிட வேண்டுமென்பதொன்றையே இலட்சியமாகக்கொண்டுள்ள எம். கே. ஆச்சாரியார், பிராமணரல்லாதாரின் ஆதரவு வேண்டியிருக்கின்ற இத்தருணம், ஜாதிபேதமற்றவர் போன்று மேடைகளில்தம் நாவன்மையைக்கொண்டு கபடநாடகம் நடிக்க முன் வரலாம். அவற்றைக்கண்டு பிராமணரல்லாதார் ஒருவரேனும் ஏமாற்றமுறாமல் இம் மாதம் 4ந்தேதி நடைபெற்ற சென்னை நகர சபைத் தேர்தலின்போது உணர்ச்சி மிக்குடைய பிராமணரல்லாதார்கள், ஜாதி இறுமாப்புப்படைத்த சுயராஜ்யக்கட்சிப் பிராமணர்கட்கு நற்பாடங் கற்றுக்கொடுத்ததுபோல், நிகழப்போகும் இந்திய சட்ட சபைத் தேர்தலின்போதும் எம். கே. ஆச்சாரியாருக்கும், அவர்போன்ற பிற ஐயர்—ஐயங்கார்மார்கட்கும் நற்பாடங் கற்றுக் கொடுக்க வேண்டியது மறக்கொணுக் கடமையாகும். சுயநலம்படைத்த ஆரியப் பிராமணர்களால், தஞ்சமுகநலங் கோரி எழுதிவைக்கப்பட்ட புரட்டுப் புராணங்களைக்காட்டி சுபாசுபகாலங்களில் பிராமணரல்லாதார் மனைதோறும் வலியச்சென்று வஞ்சித்து வயிறு வளர்க்கும் பிராமணர் தம் மாபிற்றோன்றிய எம். கே. ஆச்சாரியார், "எனதுடலில் பிராமண இரத்தம் ஓடிக் கொண்டிருக்கின்றவரை, எனது சதையைக் கண்டந்துண்டமாகச் சிதைத்தாலும் அஞ்சாது பிராமணர்களைவிட பிராமணரல்லாதார் தாழ்ந்தவர்களென்பதை நிலை நாட்டியே தீருவே"னென இறுமாப்புடன் வீரம் பேசிய பின்னும் பிராமணரல்லாதாராகிய நாம் எங்ஙனம் வாளாவிருக்கமுடியும்? எம். கே. ஆச்சாரியாரின் உடலில் இரத்தம் ஓடிக் கொடிண்டிருப்பதுபோல் நம்முடைய உடலினும் இரத்தம் ஓடிக் கொண்டிருக்க வில்லையா? பிராமணரல்லாதாராகிய நம்முடலில் சாக்கடைத் தண்ணீரா ஓடிச்கோண்டிருக்கின்றது? மன்னர் மன்னர்கள், அறிவான்மிக்க அமைச்சர்கள் விறல்பெற்றிலங்கு வீரர்கள் பலரது மாபிற்றோன்றிய நம்முடலில் வீரம் பொங்கித்ததும்பும் சுத்த இரத்தமல்லவோ ஓடிக் கொண்டிருக்கவேண்டும்? அங்ஙனமிருக்க பிராமணரல்லாதாராகிய நம்மவர்களும், தங்கள் உடலில் சுத்த இரத்தம் ஓடுகின்றவரை, சதையை சக்கை சக்கையாகப் பிளந்தாலுஞ்சரி, கல்லைக்கட்டிக் கடலில் ஆழ்த்துவதானுலுஞ்சரி, உயிருடன் குழிதோண்டி புதைப்பதானுலுஞ்சரி அஞ்சோமென்ற வீர கர்ச்சனையுடன் எம். கே. ஆச்சாரியாரைப் போன்றவர்களின் ஜாதி இறுமாப்பைக் குழிதோண்டி. புதைப்போமென சங்கற்பஞ்செய்து கொண்டு போராட என்முன் வரக்கூடாது? உண்மையிற், சுயராஜ்யத்திற்காகப் பாடு படுகிறோமென எம். கே. ஆச்சாரியார் போன்றோரும் பிற ஐயர்-ஐயங்கார்மார்களும் கூறிவருவதெல்லாம் வெறும் புரட்டேயாகும். இந்தியா சுயராஜ்யம் பெற்ற நாடாயிருப்பதைவிட, அடிமை நாடாயிருக்கவேண்டுமென்பதே பெரும்பான்மையான பிராமணர்களின் நோக்கம். என்? சுயராஜ்யம் பெற்ற இந்தியாவில் ஐயர் ஐயங்கார்மார்கட்கு ஐகோர்ட் ஜட்ஜ்பதவி, அட்வகேட்ஜெனரல்பதவி சட்டமந்திரிபதவி முதலியன எங்ஙனம் கிடைக்கப்போகின்றது? இந்தியா அடிமைநாடா யிருக்கின்றமையினுலேயே பிராமணர்கள் ஐயாயிரம், பத்தாயிரம் சம்பளமுள்ள பெரும் பதவிகள் பெற்று இந்திரபோகம் அநுபவித்துவர ஏதுவாயிருக்கின்றதோடு, தாங்கள் எல்லா ஜாதியாரினும் உயர்வானவர்களென்று வீரம் பேசுவதற்கும் ஏதுவாயிருந்துவருகின்றது. நாளை இந்தியா சுயராஜ்யமடைந்துவிடுமாயின், அட்வகேட்ஜெனரல் உத்யோகஞ் செய்து ஆயுள்முழுதும் குந்தித் தின்னுக் கொண்டிருப்பதற்குப் போதிய பொருள் தேடிவைத்துக்கொண்ட ஐயங்காரும், சட்டமந்திரி உத்தியோகஞ்செய்து ஐயாயிரத்திற்குமேற் சம்பளம் பெற்றுவரும் ஐயரும், ஜாதி இறுமாப்பை மூட்டைகட்டி வைத்துவிட்டு தர்ப்பைப் புல்லைத் தலையிற் சுமந்து கொண்டு ஆற்றங்கரையை நாடியல்லவோ செல்லநேரிடும். இவற்றை முன்னிட்டே இப்பிராமண கோஷ்டிகள் மகாத்மா காந்தியின் ஆணையைமீறி நடந்திருக்கிறார்களென நாம் நினைக்க வேண்டியதாயிருக்கின்றது. அங்ஙனமின்றி நந்தாய்நாடு சுயராஜ்யம் அடைய வேண்டுமென்ற நல்லெண்ணம் இப்பிராமணர்கட்கிருக்குமாயின், ஆரவாரப் பேச்சுக்களினுல் பிராமணரல்லாதாரை ஏமாற்றுந்தொழிலை மேற்கொள்ளாமல், நாடு சுயராஜ்யமடைதற்குப் பெருந்தடைக்கல்லாயிருக்கும் தீண்டாமை, தெருவிற் புகவிடாமை, ஆலயத்துள் நுழையவிடாமை போன்ற அக்கிரமத்தைத் தொலைப்பதற்காகப் போராடுவார்களாக.

"சமத்துவ ஊழியன்"

## திருச்சிராப்பள்ளி ஜில்லா
# தமிழர் கழகம்.

(நமது நிருபரிடமிருந்து.)

இக் கழக பெருங் கூட்டம் ஒன்று உறையூர் திரு. ச. ம. சி. பரமசிவம் அவர்கள் இல்லத்தில் 23-8-26-வ திங்கட் கிழமை மாலை 6-மணிக்கு கூடியது. திருவாளர் உ. க. பஞ்சரத்தினம் பிள்ளை அவர்கள் "தமிழர்" ஆசிரியர், தலைமை வகித்தார். கழகத்திற்கு நிறைவேற்று கூட்டம் ஒன்று தேர்ந்தெடுக்கப் பெற்றது. பல முக்கியத் தீர்மானங்கள் செய்யப்பட்டன. அவையுள் தமிழர் (பார்ப்பனரல்லாதார்)சமூக முன்னேற்றத்திற்கான பல வழிகளில் அகிம்சா தர்மத்திற்குட்பட்டும் அன்னிய ஆடை, மது, தீண்டாமை, பார்ப்பனீயம், சிறுவர் மணம் முதலியன விலக்குதலும் விதவாவிவாகத்தை ஆதரித்தலும் கழகத்தின் முக்கிய நோக்கங்களாகயிருத்தல் வேண்டுமென்றும் நிறுவாகக் கழக உறுப்பினர்கள் கதர் அவசியம் அணிதல் வேண்டுமென்றும் ஆண்டு சந்தா நான்கணுவாகவும் கழக அமைச்சராக "தெய்வீகன்" ஆசிரியரும் திருச்சி தாலுக்கா "காங்கிரஸ்" கமிட்டி காரியதரிசியுமாகிய திருவாளர் மே. வே. துரைசாமி உடையார் அவர்களை தேர்ந்தெடுக்கப் பெறுற்ம், முடிவில் இந்து அறநிலைய பாது காப்பு திருத்த மசோதாவை ஏக மனதுடன் ஆதரித்தும் தீர்மானிக்கப் பெற்றது. இத் தீர்மானத்தை சென்னை அரசியலாருக்கும் கனம் பனகால் அரசர் அவர்களுக்கும் பத்திரிகைகளுக்கும் அனுப்ப காரியதரிசி அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப் பெற்று கூட்டம் இரவு 9-மணிக்கு தலைவர் முடிவுரையுடன் கலைவுற்றது.

கழக இருப்பிடம்:— 19 நெ. பெரிய செட்டிதெருவு, உறையூர் போஸ்டு, திருச்சி,




பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித் தனி சாமான்யாவும் விலைகயமாய் கிடைக்கும். கியாட்லாக் இனும்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

"ஆனந்த விகடன்"

இதில் பல அருமையானதும் விடாநகைப்பைத் தருவதுமான விகடங்களும் விகடத்தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலிய அநேகப் பாடல்களும், விகடக் கதைகளும், ஞானந்தரும் வியாசங்களும் பலவகை குறிப்புகளும், "முத்தாம்பாள் அல்லது மோகனவடிவு" என்னும் தொடர்ப்பு நாவலும், பஞ்சாங்கமும் அடங்கியுள்ளது. இதை ஒரு தரம் வாசித்தவர்கள் மறுபடியும் வாசிக்காதிருக்கமாட்டார்கள்.

வருட் சந்தா ரூ. 2, வெளிநாட்டிற்கு ரூ, 2-8-0

1 அணு ஸ்டாம்பு அனுப்ப மாதிரி இனும்.

[மாத சஞ்சிகை]ஆனந்த விகடன் ஆபீஸ்,

சௌகார்பேட் போஸ்ட், ஜி. டி. மதராஸ்

# திருச்சினுப்பள்ளி ஜில்லா
# தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் 3-வது மகாநாடு.

மணப்பாறை (மங்கம்மாள் பங்களா)யில் செப்டம்பர் மாதம் 18, 19-உகளில் நடைபெறும்.

தலைவர்கள்.

**திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள்**
18-ந் தேதியிலும்

**திரு. R. வீரையன் அவர்கள் M. L. C.**
19-ந் தேதியிலும் தலைமை வகிப்பார்கள்.

வரவேற்புக் கழகத் தலைவர்:— திரு. எம். சாமிநாதன் அவர்கள்.

தமிழ்நாட்டு அறிஞர்களான திருவாளர்கள் டாக்டர் வரதராஜுலு நாயுடு, திரு. வி. கலியாண சுந்தர முதலியார், வி. சக்கரைச் செட்டியார், சுரேந்திரநாத் ஆரியா, என். தண்டபாணி பிள்ளை, டாக்டர் சி. நடேச முதலியார், எ. இராமசாமி முதலியார், உ. க. பஞ்சரத்தினம் பிள்ளை, ஜே. எஸ். கண்ணப்பர், ஆசுகவி கணபதியா பிள்ளை முதலியோர் மகாநாட்டிற்கு விஜயம் செய்து பல அருஞ் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

தாழ்த்தப்பட்டவர்கள் உயர்த்தப்பட வேண்டுமென்ற அருளுடையாரும் அன்புடையாரும் இதர ஜில்லாக்களிலுள்ள சகோதர சமுகத்தினரும் இம்மகாநாட்டிற்கு வரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

R. தோமை, M. R. குப்புசாமி,
வரவேற்புக் கழக உறுப்பினர்கள்.

P. சுப்பிரமணியன்,
காரியதரிசி.

## திருச்சி கவர்ன்மெண்ட் டிரைனிங் ஸ்கூலில் கொடுமை.

இப்பாதகண்ட ஆத்ம சகோதர கனதனவான்களே!

இவ்வுலகின்கண் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட என்பத்துநான்கு லக்ஷ யோனிபேத பிறவியிலும் மக்கட் பிறவியே மேன்மையுடைத் தென்பது எல்லோருமறிந்த விஷயம். மக்கள் தன்னுடைய ஜீவிய காலத்தில் அடையவேண்டியது தர்மம், அர்த்தம் காமம், மோக்ஷ மென்னும் சதுர்வித புருஷார்த்தங்களுக்கும் கருவியா யிருப்பது தேகமாகும். இத்தேகத்திற்குள் தாழ்ந்த வகுப்பினர்களின் தேகம் வேறென்றும், பிர்மாவின் முகத்தினின்று குதித்து வந்தோமென்று பிதற்றித் திரியும் முப்புரி நூலோரின் தேகம் வேறென்றும் நினைத்து திருச்சி போதனு முறை பாடசாலை ஹெட்மாஸ்டர் ஸ்ரீமான் சுந்தரமய்யர் பி. எ. எல். டி, அவர்கள் தாழ்ந்த வகுப்பினர்களாகிய எங்களைப் பிரித்து தனியாக உட்காரவைத்து பாடம் போதிக்கின்றார். காரணம் ஒன்றும் தெரியவில்லை. சாஸ்திர விதிப்படி பிரித்து வைத்து போதிக்கின்றார்களா? (அது எச்சாஸ்திரம்? அச்சாஸ்திர மிருந்தால் பிரித்துவைத்து போதிக்கின்ற தாங்களே வெளியிடல் வேண்டும்.) அல்லது காருண்ய கவர்ன்மெண்டாரவர்கள் இப்படிப்பிரித்து வைத்துப் போதிக்கும்படி தங்களுக்கு உத்திரவு அனுப்பியிருக்கிறார்களா? (அவர்களனுப்பிய உத்திரவுயிருந்தால் ஷை பாடசாலையின் நோட்டீஸ்போர்டில் ஏன் ஒட்டக்கூடாது?) அல்லது தங்கள் இஷ்டப்படி செய்திருக்கிறீர்களா? எக்காரணத்தைக்கொண்டு இப்படிச் செய்திருக்கிறீர்கள். இதுதானு உங்கள் காங்கிரசின் கொள்கை. உங்கள் வகுப்பினர்கள் ஒன்று சேர்ந்து இப்படி ஜாதிப் பிரிவினை செய்வதற்குத் தானு சாந்த மூர்த்தி மகாத்மா காந்தி அவர்களின் பெயரைச் சொல்லிக் கொண்டு சுயராஜ்யங் கேட்கிறீர்கள். எங்களைக் கெடுப்பதுமன்னியில் தீண்டாப்பேயை ஒழியுங்கள், சுயராஜ்யம் பெறலாம் என்று ஓலமிடும் தியாக மூர்த்தி மகாத்மா காந்தியின் பெயரையும் கெடுக்க நினைத்துவிட்டீர்களே. பிரிட்டிஷ் அரசாங்க ஆதிக்கத்தின் கீழ் ஊழியஞ் செய்து ஊதியும் பெற்று வயிற்றை வளர்த்துக்கொண்டு அவர்களின் உத்திரவை மீறி இப்படியெல்லாம் நடத்துகிற உங்களுக்கு சுயராஜ்யங் கொடுத்து விட்டால் தாழ்ந்த வகுப்பினர்களாகிய எங்களை பூஜ்ஜியமாகச் செய்து விடுவீர்களென்பதற்குச் சந்தேகமில்லை.

இதனலன்றோ டாக்டர் டி. எம். நாயர் பெருமானும், சர். பி. தியாகராய வள்ளலும் சேர்ந்து தீண்டாமை என்னும் கொடிய பேய் ஒழிந்து சமத்துவம் உண்டாகும்வரை சுயராஜ்யம் கூடாது என்று உடல், பொருள் ஆவி மூன்றையுந் தியாகஞ்செய்து இங்கிலாந்து சென்று போராடி ஜெயக்கொடி நாட்டிவைத்து தம் தம் உயிரை தியாகஞ் செய்தார்கள்.

ஆகையால் காருண்ய கல்வியிலாகா டைரக்டர் துரை அவர்களும் கல்வி மந்திரி அவர்களும், திருச்சி ஜில்லா எஜுகேஷனல் ஆபிசர் அவர்களும், திருச்சி ஜில்லா லேபர் ஆபிசர் அவர்களும் இவ் விஷயங்களைக் கவனித்து எங்களைப் பிரித்து உட்காரவைத்து போதிக்கும் துற் பழக்கத்தைத் தடுத்து வழக்கம்போல் ஏகோபித்து உட்காரவைத்து போதித்து முன்னேற்றமடையச் செய்யும்படி உத்திரவு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஜி. சந்நியாசி மூப்பனர், ஆசிரியர்.

## திருச்சி சித்ததர்ம வைத்தியசாலை.

—:0:—

திரிசிரபுரம் "சின்னக்கடை" தெருவில் 1—6—25 ல் பிரபல மிராசுதார் திருவாளர் கோ. சின்னையப் பிள்ளை அவர்களால் திறந்து வைக்கப்பட்ட சித்த தர்ம வைத்திய சாலையில் வரவு செலவு விபரம்:-1—6—25 முதல் 31—7—26 வரையில் 14 மாதங்களுக்கு மருந்துண்டு குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 17776 பேர்கள். இதற்கு மருந்து கிரயம், வைத்தியர்-கம்பவுண்டர் சம்பளம், கட்டிட வாடகை, அச்சுக்கூலி, ஸ்டேஷனரி, திறப்புவிழாச் செலவு முதலியவற்றிற்கு செலவாகியிருப்பது ரூ. 1492. பல நன்கொடையாளர்களிடமிருந்து வசூலித்த ரூபாய் 210. அதாவது ரொக்கம் பொருளுதவி செய்தவர்கள் திருவாளர்கள் வைத்தியர் பெரியசாமி கோனர் 57 ரூ. மிராசுதார் கோ. சின்னைய பிள்ளை 27 ரூ. மிராசுதார் அப்பாசாமி பிள்ளை 20. ரூபாய், வைத்தியர் A. Z. M. லத்திப்தீன் சாய்பு 5ரூ. வைத்திய தி. மு. வைத்திலிங்கம்பிள்ளை 16 ரூபாய், வைத்தியர் தி. பெ. பழனியாண்டி பிள்ளை 10 ரூபாய், மிராசுதார் சண்முகம் பிள்ளை 5 ரூபாய் வைத்தியர் சிங்காரம், பிள்ளை 10 ரூபாய், திருச்சி நகர பரிபாலன சபையாரால் ரூ. 60. ஆக வரவு ரூ. 210 இது நீக்கி அதிகச் செலவு ரூபாய் 1282.

இந்த சித்த, தர்ம வைத்திய சாலைக்கு மாதம் 1-க்கு சராசரி 106 ரூ. மேல் அதிகமாக செலவு ஆகியிருக்கிறது. வைத்தியர்களும் வைத்திய அபிமானிகளும் ரூ. 150 யும் திருச்சி முனிசிப்பாலிட்டியார் அவர்கள் ரூ. 60 யும் ஆக ரூ. 210—0—0 உதவியுள்ளார்கள். இந்த சொற்ப பொருளுதவியைக் கொண்டு இவ் வைத்திய சாலையை (14 மாதங்களாக) நன்கு நடைபெறச் செய்வது பெரிதும் கஷ்டமாக யிருக்கிறது. ஆகையால் வைத்திய அபிமானிகளும் நகர பரிபாலன சபையாரும் தக்க பொருளுதவி புரிந்து ஆதரிக்கவேணுமாய் பெரிதும் வேண்டிக்கொள்ளுகிறேன் என்று வைத்திய பாஸ்கரன் திரு. தி. பெ. பழனியாண்டி பிள்ளை எழுதுகிறார்.

## தமிழ் மக்களே!

பாரத நாட்டை பாழாக்கியது பார்ப்பனீயம். ஆதலால், தமிழர்களே! அதை ஒழிக்க வேண்டியது உங்கள் கடமை.

# பார்ப்பனரின் வெடி குண்டு.

ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் கும்பகோணத்தில் பேசிய பேச்சைப் பற்றி 18-8-26-உ "சுதேசமித்திரன்" தனது உப தலையங்கத்தில் 'அபத்தப் பஞ்சாங்கம்' என்ற தலைப்பின்கீழ் ஸ்ரீமான் இராமசாமி நாயக்கர் எழுத்தும் பிரசங்கங்களும் வரவர விபரீதமாயிருக்கிறது என்றும் நாயக்கருக்கு சீக்கிரத்தில் கவர்ன்மெண்டு அடிமை முத்திரை போடப்பட்டுவிடும் என்றும் நாயக்கர் பேசுகையில் எவ்வித காரணமில்லாமல் சிறை சென்றதற்கு விசனப்படுகிறேன் என்றும் பிராமண சூழ்ச்சி வலையில் அகப்பட்டுக்கொண்டேன் என்றும் சொன்னதாக எழுதி இதன் மூலம் நாயக்கருக்கு அசட்டுப் பட்டம் ஏற்பட்டுவிட்டதாகவும் நாயக்கரை ஒரு பிராமணனும் ஏமாற்றி சிறைக்கனுப்பவில்லை என்றும், காங்கிரசினால்தான் பணக்கால் ராஜாவுக்கு மந்திரியானதென்றும் நாயக்கருக்கு ராஜீய உலகில் ஒரு முக்கிய ஸ்தானம் கிடைத்ததென்றும் அப்படி இருக்க காங்கிரசை இகழ்வது மாதுரு துரோகமென்றும் எழுதுகிறான். இவற்றை நன்றாய் ஆராய்ந்து நாயக்கர் மாதுரு துரோகியா அல்லது "மித்திரன்" கூட்டத்தார் மாதுரு காமியா என்பதை கவனிப்போம்.

இப்பார்ப்பன "மித்திரன்" யோக்கியனாயும், பயங்காளியாயில்லாதவனுமிருந்திருந்தால் கும்பகோணத்தில் நாயக்கர் இரண்டரை மணி நேரம் பேசிய பேச்சை கொஞ்சமாவது எழுதியிருக்கவேண்டும். "மித்திர"னே நாயக்கரைப்பற்றி எழுதுகையில் நாயக்கர் வெறும் ஆளல்ல, ராஜீய உலகத்தில் (எந்த விதத்திலோ) ஒரு முக்கியஸ்தானம் அடைந்தவர் என்று ஒப்புக்கொள்ளுகிறான். அப்படியிருக்க, அப்படிப்பட்டவர் பேசியதை பிரசுரிக்காமல் விட்டது எவ்வளவு அக்கிரமம் என்பதை வாசகர்களே உணரவேண்டும். நாயக்கர் ஜெயிலுக்குப் போனதைப் பற்றி சொன்ன வார்த்தைகள் என்னவென்றால் இந்த பார்ப்பனர்களை நம்பி சுயராஜ்யத்திற்கு என்று ஜெயிலுக்குப் போனது முட்டாள் தனமென்று உணருவதுடன் இப்படிப்பட்டவர்களை நம்பி ஜெயிலுக்குப் போனோமே, இப்போது அதன் பலன்கள் சுயராஜ்யத்திற்கு உதவாமல் பார்ப்பனராட்சிக்கு உதவுவதோடு பார்ப்பனரல்லாதாரின் அடிமைத் தனத்திற்கும் நிரந்தர தாழ்வுக்கும் உபயோகப்படும்படியாய் விட்டதே என்று வருதப்படுவதுடன் இக் காரியத்திற்கு நாமும் துணை நின்றோமே என்று நினைத்து வெட்கப்பட வேண்டியதாயுமிருக்கிறது என்றே பேசினார். அல்லாமலும் இனியும் இந்த பார்ப்பன ஆதிக்கமிருக்கும் வரை சுயராஜ்யத்திற்கென்று ஜெயிலுக்குப்போவது பயித்தியக்காரத் தனமாய் முடியுமென்றே இன்னமும் சொல்லுகிறோம்.

ஏனெனில் ஸ்ரீமான்கள் நாயக்கர், நாயுடு முதலிய பல ஆயிரக்கணக்கான பேர்கள் நமது நாட்டில் ஜெயிலுக்குப் போனதை சொல்லிக்கொண்டு அதன் பலனை நமது பார்ப்பனரே அனுபவிக்கிறார்கள். தேசமக்களுக்கு அது கொஞ்சமும் உபயோகப்படாமலே செய்துவிட்டார்கள். பார்ப்பன சூழ்ச்சி வலையில் அகப்பட்டுக்கொண்டேன் என்று சொல்ல வரவில்லை. பார்ப்பனர்களை நம்பினேன் அவர்கள் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டார்கள் என்றே சொன்னோம். ஸ்ரீமான்கள் சினிவாசய்யங்காரையும் எ. ரங்கசாமி ஐயங்காரையும் எஸ். சத்தியமூர்த்தி அய்யரையும் நாம் எப்பொழுதுமே நம்பவில்லை. அவர்களால் ஏமார்ந்ததாகவும் சொல்லவில்லை. ஆனால் ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியாரை நம்பினோம்; அவர் மோசம் செய்துவிட்டார். அவரை நம்பி மோசம் போனோமே என்றுதான் வருத்தப்பட்டோம். இதை மகாத்மா காந்தியிடமும் நேரில் சொன்னோம். இதற்காக "மித்திரன்" நாயக்கர் ஏமாறுவதற்கு அவர் சிறு பிள்ளையா சிறு பிள்ளைத் தனமா? என்று எழுதியிருக்கிறான். நாயக்கர் சிறு பிள்ளையா? கிழவனா? என்பதைப்பற்றி கவலைப்படவேண்டாம். ஏனெனில் நாயக்கர் மாத்திரம் பார்ப்பனர்களால் ஏமாறவில்லை. கோடிக் கணக்கான பார்ப்பனரல்லாத ஜனங்கள் ஏமாந்துபோனார்கள்; ஏமாந்து போகிறார்கள்; இன்னமும் பார்ப்பனர்களை நம்பி ஏமாந்துகொண்டுதான் வருகிறார்கள். இவ்வளவும் போதாமல் மகாத்மா காந்தியே இப் பார்ப்பனர்களை நம்பி ஏமாந்துபோய் விட்டதோடு 'படித்தவர்களை நான் நம்பினேன் நம்பின அளவு பலனடையவில்லை' என்றே சொல்லியிருக்கிறார். படித்தவர்கள் யார் என்றுகூட சொல்லவேண்டுமா?

நிற்க ஜெயிலுக்குப்போவதில் இன்னமும் நமக்கு சலிப்பு ஏற்பட்டுப் போகவில்லை. பார்ப்பன ஆதிக்கத்திற்காக ஜெயிலுக்குப் போவது தப்பு என்று மாத்திரம் எண்ணுகிறோமே ஒழிய பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிப்பதற்கு நாமும் நம் குடும்பமும் நண்பர்களும் இனியும் எத்தனை தடவையானாலும் ஜெயிலுக்குப்போக காத்துக்கொண்டுதானிருக்கிறோம். சட்ட சபைத் தேர்தல்கள் முடிந்தவுடன் கண்டிப்பாய் அந்த பாக்கியம் கிடைக்குமென்றே மனைவியார் சகிதம் சந்தோஷத்துடன் காத்துக்கொண்டே இருக்கிறோம். அதற்கு வேண்டிய காரியங்கள் நமது பார்ப்பனர்களால் வெகு நாளாகவே நடந்து வருவதையும் நாம் அறிவோம்.

தவிர காங்கிரசினால்தான் நமக்கு யோக்கியதை வந்ததாக "மித்திரன்" எழுதுகிறான் காங்கிரசினால் நமக்கு யோக்கியதை வந்ததா? நம்போன்றவர்களால் காங்கிரசுக்கும் "மித்திரன்" கூட்டத்தாராய இப்பார்ப்பனர்களுக்கும் யோக்கியதை வந்ததா? என்பதை வாசகர்களேதான் அறிய வேண்டும்.

நாயக்கர் காங்கிரசுக்கு வரும்போதுகாங்கிரசுக்குநாட்டில் இருந்த யோக்கியதை யாரும் அறியாததல்ல.யாரோ நான்கு படித்த பார்ப்பனர்களான அனாமதேயங்களும் அன்னக்காவடிகளும் அதில் சேர்ந்து பணம் சம்பாதித்து, வந்தார்கள். அவைகளை வைத்துக்கொண்டு மாதம் 10 ரூபாய்கூட தங்கள் வக்கீல் உத்தியோகத்தில் சம்பாதிக்க முடியாமலிருந்தவர்கள் காங்கிரசில் சேர்ந்து பத்திரிகைகள் போட்டு வெறும் அபத்தப் பஞ்சாங்கத்தையே எழுதி அதன் பேரால் மாதம் 1000, 2000, 5000 ரூ. வீதம் நமது பொருளைக் கொள்ளை அடித்துக்கொண்டு வந்தார்கள். அதல்லாமலும் தாங்கள் காங்கிரசில் இருப்பதன் மூலம் சர்க்காருக்கு தேசத்தை காட்டிக்கொடுத்தும் தங்கள் பிள்ளை குட்டிகளுக்கு உத்தியோகம் சம்பாதித்துக் கொடுத்துக்கொண்டும் வந்தார்கள். இந்த மாதிரி காங்கிரசைப்பற்றி 100-க்கு 99 பேர் பார்ப்பனரல்லாதாருக்கு யாதொரு விஷயமும் தெரியாமலே இருந்தது.

இந்த நிலையில் இந்தக் கூட்டத்தாரை ஒளிக்க சர்க்காரார் அடக்குமுறைச் சட்டங்கள் போட்டதற்கும் ஜஸ்டிஸ் கட்சியார் உதை போட ஆரம்பித்ததற்கும் பயந்து கொண்டு மகாத்மாவையும் நம்போன்றவர்களையும தஞ்சமடைந்து அதிலிருந்து தப்பினார்கள். இந்த நிலையில் நாயக்கர் போன்றவர்கள் காங்கிரசுக்குள் வரும்போது அவருடைய யோக்கியதையும் காங்கிரசுக்குப் போன பின்பு அவருடைய யோக்கியதையும் யோசித்துப் பார்த்தால் "மித்திர"னின் கூட்டத்தாருக்கு யோக்கியதை கிடைத்ததா? நாயக்கருக்கு யோக்கியதை கிடைத்ததா? என்பது விளங்காமல் போகாது.

ஸ்ரீமான் நாயக்கர் காங்கிரசுக்கு வருமுன் வருஷம் 1000 ரூபாய் வருமானவரி செலுத்திவந்தார். பல பெரிய மில்லுகளுக்கு ஏஜண்டாகயிருந்தார். சொந்தத்தில் யந்திரசாலைகள் வைத்து நடத்திவந்தார். இப்போது அவருக்கு வியாபாரத்தில் ஒரு காசுகூட வருமானவரி இல்லை. அவர் இருந்த ஏஜண்டு வேலைகளுக்கு அவருக்குப் பின்னால் வந்தவர்கள் 4 லட்சம் 5 லட்சக்கணக்கான பணம் சம்பாதித்திருக்கிறார்கள். ஒத்துழையாமையின் போது பதினாயிரக்கணக்கான ரூபாய் பத்திரங்கள் ஆதாரங்கள் வாய்தா கடந்து நஷ்டமேற்பட்டது. உதாரணமாக ஒரு முப்பது ஆயிரம் ரூபாய் பத்திரம் சம்பந்தமான விவகாரத்தில் வழக்காடாமல் அப்படியேஅடியோடுவிட்டுவிடப்பட்டது. அப்போதைய காங்கிரஸ் பிரசிடெண்டான ஸ்ரீமான் சி. விஜயராகவாச்சாரியாருக்கு இது நன்றாய் தெரியும். அதோடு அவர் எதிர் வழக்காடும்படியும் கண்டிப்பாய் ஜெயித்து 30 ஆயிரம் ரூபாயை பெறலாம் என்றும் தானே பீசில்லாமல் வந்து பேசுவதாகவும் நாயக்கரை எவ்வளவோ கட்டாயப்படுத்தினார். ஸ்ரீமான் ஆச்சாரியார் இப்போது சேலத்தில் இருக்கிறார். யார் வேண்டுமானாலும் எழுதிக் கேட்டுக் கொள்ளலாம். இன்னும் நாயக்கர் காங்கிரசுக்கு வருமுன் முனிசிபல் சேர்மென், ஜில்லா—தாலூக்கா போர்டு மெம்பர் ஆனரரிமேஜிஸ்ட்ரேட்டு முதலிய சர்க்கார் சம்மந்தப்பட்ட பதவி வேலையிலும் இருந்து வந்ததோடு ஒரே தாளில் இவை அனைத்தையும் ராஜினாமா கொடுத்தார். ராஜினாமா செய்தபிறகும் இரட்டை முதல் வகுப்பு பிரயாணப்படியும் நாள் ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் கௌரவப்படிப் பணமும் சர்க்கார் கொடுப்பதாகவும் தெரிவித்து இன்கம்டாக்ஸ் அபீல் போர்ட்டில் கமீஷனராக இந்தியா கவர்மெண்டாரால் நியமிக்கப் பட்டவராகவுமிருந்தார். சர்க்காரிலும் அசிஸ்டெண்ட் ரெக்ரூட்டிங் ஆபீசர் வேலை கொடுக்கத்தக்க நம்பிக்கையுடைய

# பார்ப்பன அகராதி

(சித்திரபுத்திரன்.)

**கா**ங்கிரஸ் என்றால் என்ன? வெள்ளைக்கார ஆதிக்கத்தை ஒடுக்கி பார்ப்பன ஆதிக்கத்தை ஏற்படுத்துவது.

வெளியேற்றம் என்றால் என்ன? பார்ப்பனரல்லாதார் சமூகத்தையும் அவர்கள் சுயமரியாதையையும் ஒளிக்க மறுபடியும் சிலகுல துரோகிகளை கூட்டிக் கொண்டு வாக்குத்தத்தத்தை மீறி மனச் சாக்ஷியின்பேரால் கட்டுப்பாடாய் சட்டசபைக்குப் போவதுதான்.

தொழிலாளிகள் நன்மை என்றால் என்ன? தொழிலாளிகளை ஏமாற்றி அவர்களுக்குத் தலைவர்களாகி அவர்கள் ஓட்டுப்பெற்று சட்ட சபை ஸ்தல ஸ்தாபனங்களில் ஸ்தானம் பெற்று தொழிலாளர்களையே விட்டு பார்ப்பனரல்லாதாரையும் தலைவர்களையும் ஈனத்தனமாகவும் இழித் தன்மையாயும் திட்டும்படியும் அடிக்கும்படியும் கலகம் செய்யும்படியும் தூண்டி விடுவது.

இந்துமத பரிபாலன சட்டத்தால் இந்துமதம் போய்விடுமே என்று பயப்படுகிறார்கள் என்றால் என்ன? பார்ப்பனருக்கு வரும்படி போய்விடுமே என்று பயப்படுவது.

மத விஷயத்தில் சர்க்கார் பிரவேசிக்கிறார்களே என்றால் என்ன? பார்ப்பனரல்லாதார் பிரவேசிக்கிறார்களே என்பது.

சட்ட சபைகளிலும்போது மத பரிபாலன சட்டத்தை நிறைவேற்றுகிறார்களே என்றால் என்ன? பார்ப்பனரல்லாதார் எல்லாம் இம் மசோதாவை ஆட்சேபிப்பவர்களுக்கு மறு தேர்தலில் ஓட்டுக்கொடுக்கமாட்டார்களே என்கிற பயம்தான்.

பார்ப்பனரல்லாத தலைவர்கள் என்றால் என்ன? பார்ப்பனர் பார்த்து போடு தோப்புக்கரணம் என்றால் இதோ போடுகிறேன் எண்ணிக்கோ என்று சொல்பவர்களைத்தான்.

பிராமணத் துவேஷமென்றால் என்ன? பார்ப்பனரல்லாதார் சுய மரியாதைக்கு பாடுபடுவதுதான்.

சுயராஜ்பக் கட்சியின் கட்டுப்பாட்டிற்கு கட்டுப்படுவது என்றால் என்ன? பார்ப்பனரல்லாதாரை ஒடுக்க பார்ப்பனர் சொல்லுகிறபடியெல்லாம் கொஞ்சமும் தவறாமல் கட்டுப்பாடாய் நடப்பதுதான்.

காங்கிரஸ் துரோகம் என்றால் என்ன? காங்கிரஸ் பேரால் பார்ப்பனர் பாமர ஜனங்களை ஏமாற்றுவதை வெளியிலெடுத்துச் சொல்வதுதான்.

காங்கிரஸ் தோல்வி என்றால் என்ன? பார்ப்பனருக்கும் அவர்களின் அடிமைகளுக்கும் சட்ட சபையிலும் ஸ்தல ஸ்தாபனங்களிலும் இடம் கிடைக்காமல் போவதுதான்.

பொது ஜனங்களுக்கு ராஜீய ஞானம் இல்லையென்றால் என்ன? பார்ப்பனரல்லாதாருக்கு ஓட்டுப்போடுவதுதான்.

பொது ஜனங்கள் ஏமாறவில்லை என்றால் என்ன? பார்ப்பனருக்கு ஓட்டுப் போடுவதுதான்.

பிராமண விசுவாசம் என்றால் என்ன? கர்ப்பதான முகூர்த்தம் முதல் பிறந்து வளர்ந்து செத்தும் செத்தபிறகும் பார்ப்பனருக்கு பணம் கொடுத்து சடங்கு செய்து பார்ப்பனர்கள் தயவால்தான் மோக்ஷத்திற்கு போகலாம் என்று சொல்வதுதான்.

தருமபூஷணம் என்றால் என்ன? ஆயிரக்கணக்கான ரூபாயை ஒரு பார்ப்பனரின் காலில் கொட்டி தங்க புஷ்பத்தால் அருச்சனை செய்து அக்காலைக் கழுவி அந்த தண்ணீரை சாப்பிடுவதுதான்.

செல்லுபடி இல்லாத எலெக்ஷன் என்றால் என்ன? பார்ப்பனர் தோற்றுப்போகும் எலெக்ஷன்கள்தான்.

நல்ல நிர்வாக அதிகாரி என்றால் யார்? பார்ப்பனருக்கு உத்தியோகம் கொடுப்பவன்தான்.

கொடுமையான அதிகாரி என்றால் யார்? பார்ப்பன சிப்பந்திகள் செய்யும் அயோக்கியத்தனத்தைக் கண்டிப்பவன்தான்.

மகா அயோக்கிய அதிகாரி என்றால் என்ன? பார்ப்பன சிப்பந்திகள் லஞ்சம் வாங்குவதைக் கண்டு பிடித்து இனிமேல் இப்படிச் செய்யாதே என்று சொல்லுகிறவன்தான்.

சுதேச வைத்தியம் என்றால் என்ன? பார்ப்பனர்மாத்திரம் படிக்கத்தக்க வைத்திய முறையும் பார்ப்பனர்களே வைத்தியர்களாயிருந்து தீர்க்கத்தக்க வைத்தியமுமாகிய சமஸ்கிருதத்தில் உள்ள ஆயுர்வேத வயித்தியம்தான்

பரதேச வைத்தியம் என்றால் என்ன? பார்ப்பனரல்லாதார் படிக்கத்தக்கதும் பார்ப்பனரல்லாதார் வைத்தியராகத் தக்கதுமான தமிழில் உள்ள சித்த வைத்தியம்தான்.

இந்தியாவுக்கு பொது பாஷை என்றால் என்ன? பார்ப்பனர் மாத்திரம் படித்து இந்தியாபூராவும் சுற்றிப் பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்த உபயோகப்படும் ஹிந்திபாஷைதான்.

தமிழ்ச்சங்கம் என்றால் என்ன? அக்கிராசனாதிபதி பார்ப்பான் உப அக்கிராசனாதிபதி பார்ப்பான் காரியதரிசி பார்ப்பானாக இருக்கும் சங்கம்தான்.

தமிழ் கலாசாலை என்றால் என்ன? பிரின்ஸ்பால் பார்ப்பனன், உதவி பிரின்ஸ்பால் பார்ப்பனன், உபாத்தியாயர் பார்ப்பனன், படிக்கும் பிள்ளைகளும் பார்ப்பனப் பிள்ளைகளாய் இருப்பதுதான்.

சமஸ்கிருதத் துரோகிகள் என்றால் யார்? தனித்தமிழ் பேசுகிறவரும் எழுதுகிறவரும்தான்.

தமிழில் தக்க ஆராய்ச்சியுடையவர் என்றால் யார்? சமஸ்கிருதத்தில் இருந்துதான் தமிழ் வந்தது. தமிழுடன் சமஸ்கிருத வார்த்தைகளையும் சேர்த்துப் பேசுவதுதான் தமிழுக்கு அதிக யோக்கியதையைக் கொடுக்கும் என்று சொல்லுபவர்தான்.

தமிழில் கொஞ்சமும் ஆராய்ச்சி இல்லாதவன் என்றால் யார்? தமிழ் தனிப்பாஷை, வேறு எந்த பாஷையின் உதவியல்லாமலே அது இருந்திருக்கிறது என்று சொல்லுபவன்தான்.

தேசியப்பத்திரிகை—யோக்கியமான பத்திரிகை என்றால் எது? பார்ப்பனர்களுக்கு விரோதமில்லாமல் அவர்கள் செய்யும் அக்கிரமங்களை யெல்லாம் மூடிவைத்து விட்டு காங்கிரசைப் போற்றவேண்டும், சுயராஜ்யக் கட்சியில்தான் தேசியத் திட்டம் இருக்கிறது, அதை ஆதரித்து ஜஸ்டிஸ் கட்சியை ஒழிக்கவேண்டும் என்று எழுதுவதுதான்-

யோக்கியப்பொருப்பற்ற—தேசபக்தி இல்லாத பத்திரிகை என்றால் எது? காங்கிரசின் தற்கால யோக்கியதையையும் அதில் இருக்கும் பார்ப்பன சூழ்ச்சியையும் வெளியிலெழுதுவதும் சுயராஜ்யக் கட்சி சுத்தமாய் பார்ப்பனக் கட்சி என்று எழுதுவதுமான பத்திரிகைதான்.

---

வாரகவும் இருந்தார். (இது ராணுவ சம்மந்தமான உத்தியோகம்) இன்னும் பலவகைகள் இருந்தாலும் இவைகளைப் பற்றி எழுதுவது தற்பெருமைக்கு இந்த சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்திக் கொண்டதாகக் கருதப்படும் என்று அஞ்சுவதோடு இதையும் தற்பெருமைக்கு எழுதுவதாகவே சிலர் கருதுவார்கள் என்று பயப்படுகிறோம். ஆனாலும் இப்பார்ப்பனர்களின் அக்கிரமத்திற்கு பதில் சொல்லாமலிருக்க முடிவதில்லை. இவ்வைந்தாறு வருஷகாலத்தில் வருஷம் பதினாயிரக்கணக்கான ரூபாய் சம்பார்த்தனையும் போய், கைமுதலும் எவ்வளவோ நஷ்டப்பட்டு மிருக்கிறோம். ஸ்ரீமான்கள் சத்திய மூர்த்தி சாஸ்திரிக்கோ, எ. ரெங்கசாமி அய்யங்காருக்கோ எஸ் சீனிவாசய்யங்காருக்கோ வி. எஸ். சீனிவாச சாஸ்திரிக்கோ, பி. என். சர்மாவுக்கோ எம். கே. ஆச்சாரிக்கோ மற்றும் பல அய்யர் ஆச்சாரியார் சர்மாவுக்கோ காங்கிரசில் சேர்ந்து எவ்வளவு ரூபாய் எவ்வளவு கௌரவ நஷ்டம் ஏற்பட்டது? இவர்களிடம் இருந்து காங்கிரசைக் கழித்து விட்டால் மீதி என்ன என்பதை இவர்களே யோசித்துப் பார்க்கட்டும். இப்படி இருக்க நாம் காங்கிரசின் மூலம் யோக்கியதை அடைந்து விட்டதாக சொல்லுகிறார்கள். இவ்வளவும் போதாமல் நம்மிடம் பிராமண துவேஷமிருக்கிறது என்கிறார்கள். நம்மிடம் உண்மையில் துவேஷம் இருக்கிறதா, இவர்களிடம் இருக்கிறதா? நம்மிடம் இருக்குமானால் குறைந்த அளவு அவர்கள் நம்மை சொல்லுவது போலவாவது நாமும் அவர்களைச் சொல்ல மாட்டோமா? அவர்கள் நம்மை சூத்திரன் என்று கூப்பிடுவதோடு சூத்திரன் என்றால் வைப்பாட்டி மகன், தாசி மகன் என்று எழுதியே வைத்துக் கொண்டிருக்கிறார்களே. நாமும் அவர்களை அந்த மாதிரி சொல்லமாட்டோமா? சொன்னால் தலைபோய் விடுமா? பார்ப்பனர் விஷயத்தில் அவர்கள் யோக்கியதையைப் பற்றி எவ்வளவோ உண்மைகளைக் கூட நாம் சொல்லப்பயப்படுகிறோமே. இப்படியெல்லாம் நாம் பயப்படும் போதே இவர்கள் நம்மை இவ்வளவு தூரம் ஒழிக்கப் பார்க்கிறார்கள். ஆனால் இவைகளை எதிர்பார்த்தே இக் கருமத்தில் இறங்கினோமானதால் இவைகளைப் பற்றி ஒரு சிறிதும் நாம் கவலைப்படாமல் இன்னும் இப்பார்ப்பனர்கள் வெடி குண்டுக்கு மார்பைக் காட்டிக் கொண்டுதான் இருக்கிறோம் என்பதாக உறுதிகூறுகிறோம்.

# ஈரோடு முனிசிபாலிட்டி.

## 20 கவுன்சிலர்களில் 12 கவுன்சிலர்களின் ராஜீனமா.

ஈரோடு முனிசிபாலிட்டியின் சேர்மென் ஸ்ரீமான் டி. சீனிவாச முதலியாரின் நடத்தையைப்பற்றி 'குடி அரசின்' மூலம் அப்போதைக்கப்போது வெளிவந்த வியாசங்களிலிருந்து நேயர்கள் விபரம் அறிந்திருக்கலாம். ஆனால் அரசாங்கத்தார் ஒரே பிடிவாதமாய் இதைப்பற்றி கவனித்து தக்கது செய்யாமல் வேண்டுமென்றே அலக்ஷியமாய் இருந்துவந்தார்கள். அதாவது முனிசிபாலிட்டி பணத்தை சொந்த உபயோகத்திற்காக கையாடினது: அதற்காக பொய்யான கணக்கு கொடுத்தது: அதற்காக நியாய விரோதமாய் தீர்மானங்களை நிறைவேற்றிக்கொண்டது: தீர்மானங்கள் ஆன பின்பு தீர்மானங்களை வரிப்பிளந்து திருத்திக்கொண்டது: நடக்காத தீர்மானங்களை எழுதிக்கொண்டது: கவுன்சிலர்கள் கேள்விக்கு பதிலளிக்காதது: கவுன்சிலர்களுக்கு கணக்குக்காட்ட மறுத்தது: இம்மாதிரியான காரியங்களுக்கு இரண்டொரு கவுன்சிலர்களின் ஆதரவு பெறுவதற்கு முனிசிபாலிட்டியின் நன்மைக்கு விரோதமாய் சலுகை காட்டுவது: கவுன்சிலர் மீட்டிங்கு போடும்படி கேட்டுக்கொண்டால் அதை மறுப்பது: பணம் கையாடிய விஷயமாக சேர்மெனை பிராசிகூஷன் செய்ய சர்க்காரை அனுமதி கேட்கத் தீர்மானம் கொண்டுவந்தால் அதற்காக மீட்டிங்கு போட மறுப்பது: இவைகளினாலும் இன்னும் பல காரணங்களாலும் சேர்மென்மீது நம்பிக்கையில்லை என்கிற தீர்மானம், மொத்தம் 20 கவுன்சிலர்களில் 12 கவுன்சிலர்களால், கொண்டுவரப்பட்டும் அதை நிராகரித்தது ஆகிய பல காரியங்களை செய்துவந்ததால் இவைகளைப்பற்றி கலெக்டரிடம் பல கவுன்சிலர்கள் சொல்லிக்கொண்டதில் யாதொரு பிரயோஜனமும் ஏற்படாததால் பல கவுன்சிலர்கள் சென்னைக்கு சென்று முனிசிபல் நிர்வாக இலாகா தலைவராகிய கனம் முதல் மந்திரியை பேட்டிகண்டு இவ்வளவு விஷயங்களையும் ஆதாரத்துடன் எடுத்துச் சொல்லியும் அவரும் சரியானபடி கவனிக்காததால் மேற்படி பன்னிரண்டு கவுன்சிலர்களும் 23-8-26 தேதி ராஜீனமா செய்துவிட்டார்கள். இதில் இரண்டொருவர் அடுத்த மாதம் வரப்போகும் தேர்தலுக்கு அபேக்ஷகராயிருந்ததையும் வாபீஸ் வாங்கிக்கொண்டார்கள்.

ராஜீனமா கொடுத்த 12 கவுன்சிலர்களில் 10 பேர் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் 2 பேர் சர்க்காரால் நியமனம் செய்யப்பட்டவர்கள். மீதி உள்ள 8 பேர்களில் மூன்று பேர் நியமிக்கப்பட்டவர்கள். மற்றபடி தெரிந்தெடுக்கப்பட்டவர் 5-பேர்களில் சேர்மெனைக் கழித்து விட்டால் நான்கே நான்கு தான். தெரிந்தெடுக்கப்பட்ட கவுன்சிலர்கள் சேர்மெனின் இவ்வித நடவடிக்கைகளை பல காரணங்களால் சகித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ராஜீனமா கொடுத்த 12 கவுன்சிலர்களும் தங்களது ராஜீனமாவில் குறிப்பிட்டிருக்கும் விஷயம் என்னவென்றால் சேர்மெனின் நடவடிக்கைகள் ஒழுங்கமற்றதாகவும் கண்ணியமற்றதாகவும் நாணயக் குறைவானதாகவும் இருப்பதாலும் இதைப்பற்றி அரசாங்கத்தாரும் கவலையில்லாதிருப்பதாலும் இம்மாதிரி நிலையில் கவுன்சிலர்களாயிருப்பது தங்கள் சுயமரியாதைக்கு ஏற்றதல்லாதிருப்பதால் நாங்கள் எல்லோரும் ராஜீனமா செய்கிறோம் என்று எழுதியிருக்கிறார்கள். நியமிக்கப் பட்ட கவுன்சிலர்களில் ஒருவராகிய "தீண்டாதவகுப்பைச்" சேர்ந்த ஸ்ரீமான் சுப்பன் என்பவரும் சேர்மென் நடவடிக்கை ஏமாற்றுவதாகவும் சுயநலங் கொண்டதாகவும் இருப்பதாலும் இதை கேட்க ஆளில்லாமல் போய்விட்டதாலும் ராஜீனமா கொடுக்கிறேன் என்று எழுதி ராஜீனமா கொடுத்திருக்கிறார். மற்றொரு நியமன கவுன்சிலராகிய பென்ஷன் தாசில்தார் அவர்களும் சேர்மெனின் தற்கால ஆட்சியில் தான் கவுன்சிலராயிருப்பதால் யாதொரு பலனும் இல்லை என்று எழுதிக் கொடுத்திருக்கிறார்.

ஆகவே பன்னிரண்டு கவுன்சிலர் சேர்மென்மேல்மாத்திரம் குற்றம் சொல்லி ராஜீனமா செய்யாமல் சர்க்கார்பேரிலும் குற்றம் சொல்லி ராஜீனமா செய்திருக்கிறார்கள். ஏனெனில் சேர்மெனின் இவ்வித நடவடிக்கைகளைப் பற்றி சர்க்காருக்கு அப்போதைக்கப்போது தெரியப்படுத்திக் கொண்டு வந்திருந்தும் சர்க்கார் கணக்கு பரிசோதகர் வந்து கணக்குகளில் நாணயக் குறைவு இருக்கிறதென்றும் சேர்மென் முனிசிபல் பணத்தை கையாண்டிருக்கிறார் என்றும் இவைகளை சரிசெய்ய பொய் கணக்கு கொடுத்திருக்கிறார் என்றும் பழய தீர்மானங்களில் வரிப்பிளந்து அவைகளை புதிதாக எழுதியிருக்கிறார் என்றும் முனிசிபல் நன்மைக்கு விரோதமாய் தனக்கு வேண்டியவர்களுக்கு நன்மை செய்திருக்கிறார் என்றும் வண்டி வைத்துக் கொள்ளாமல் தான் வண்டி வைத்துக் கொண்டதாக மாதம் 10-ரூபாய் முனிசிபல் பணத்தை இன்னும் பொய்யில் எழுதிக் கொடுத்து அனுபவித்து வந்திருக்கிறார் என்றும் பலவித கடுமையானதும் நாணயக்குறைவுள்ளதுமான குற்றங்களை கண்டு பிடித்து சர்க்காருக்கு ரிப்போர்ட் செய்து சுமார் 5, 6-மாத காலமாகியும் கலெக்டர் இவ்விஷயங்களையெல்லாம் அறிந்திருந்தும் சரியானபடி நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமல் தனக்கு அதிகாரமில்லை என்று சொல்லிவிட்டதால், முனிசிபல் நிர்வாக இலாகா மந்திரியிடம் இவைகளையெல்லாம் கவுன்சிலர்கள் நேரில் தெரிவித்தும் அவர்களும் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளாததாலும் சில விஷயங்களில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள சட்டப்படி இடமில்லை என்று சொன்னதாலும் சர்க்கார் பேரிலும் குற்றம் சொல்லி ராஜீனமா கொடுக்க ஏற்பட்டது. சுயமரியாதை உள்ள மனிதர் யாரானாலும் இந்த நிலைமையில் ராஜீனமா கொடுப்பதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியாது. ஆதலால்தான் ராஜீனமா கொடுக்க நேர்ந்தது.

வெளியில் உள்ள பொது மக்கள் இந்த ராஜீனமாவை நமது எதிரிகளான பார்ப்பனர் மந்திரிகளின்கட்சிக்குவிரோதமாய் உபயோகப்படுத்திக் கொள்வார்களோ என்று ஒரு சமயம் பயப்படலாம். அப்படிப் பயப்பட வேண்டிய அவசியமில்லை என்றே சொல்லுவோம். ஏனெனில் பிரஸ்தாப சேர்மென் பார்ப்பனர்களையும் சரிப்படுத்தி வைத்துக் கொண்டுதான் இருக்கிறார். இந்த விஷயத்தைப்பற்றி எந்தப் பார்ப்பனரும் எந்தப் பார்ப்பனப் பத்திரிகைகளும் வெளிப்படுத்தவே முன்வராது. உதாரணமாக இதைப்பற்றி பல பார்ப்பனப் பத்திரிகைகளுக்கு எழுதியும் அவைகள் போடவில்லையாம். காரணம் சட்டசபைக்கு நிற்கும் பார்ப்பனருக்கும் மற்றும் பல பார்ப்பனருக்கும் இந்த பிரதி பிரயோஜனத்தையும் கொண்டே வேலைசெய்வதாய் ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதால் அந்தப் பார்ப்பனருக்கே மற்ற பார்ப்பனரும் பார்ப்பனக் கட்சியாரும் பார்ப்பனப் பத்திரிகைகளும் கட்டுப்பட்டிருப்பதால் "உப்புக்கண்டம் திருட்டுக் கொடுத்த பார்ப்பனத்திபோல்" என்கிற பழமொழிப்படி வாயை மூடிக் கொண்டிருக்கவேண்டியிருக்கிறது. மந்திரிகள் பேரிலும் நாம் அதிகமாய் குற்றம் சொல்ல முடியவில்லை. ஏனெனில் முனிசிபல் சட்டம் அவ்வளவு ஊழலாயிருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் ஸ்ரீமான் விஸ்வநாத தாஸை பிராசிகூஷன் செய்து ஜெயிலுக்கனுப்ப தயாராயிருந்த சட்டம் ஸ்ரீமான் டி. சீனிவாச முதலியாரை ஏன் என்று கேட்கக்கூட இடம் கொடுக்கவில்லை என்றால் அதை மாத்திரம் ஒப்புக்கொள்ள முடியாததற்கு வருந்தப்படாமலிருக்க முடியவில்லை. ஆனால் ஸ்ரீமான் விஸ்வநாத தாஸை ஜெயிலுக்கனுப்பச் செய்த சட்டம் என்னவென்றால் அவர் மந்திரிகளுக்கு விரோதமாயிருந்த சட்டம் தான் என்று நமது பார்ப்பனர்கள் சொல்லுகிறார்கள். அது நிஜமாயிருந்தால் ஸ்ரீமான் ஸ்ரீனிவாச முதலியாரை சும்மா விட்டுவிட வேண்டியது அந்த சட்டத்தின்படியே சரிதான்! ஏனென்றால் இவர் தான் எலெக்ஷன்களில் பார்ப்பனருக்கு வேலை செய்தாலும் மந்திரி கட்சியைச் சேர்ந்தவர் என்று சொல்லிக்கொள்ளுகிறார். ஆதலால் நாம் முனிசிபல் நிர்வாகிகளுக்கு சொல்லுவதென்னவென்றால் இதைப்போல் மற்றவர்களும் நடந்துகொள்ளாதபடிக்கு முனிசிபல் பணத்தை கொள்ளையடிக்க இடங்கொடுப்பதாய் சொல்லப்படும் சட்டத்தையாவது திருத்துவார்களா என்றுதான் கேட்கிறோம்.

ராஜீனமா செய்த கவுன்சிலர்களின் பெயரும் அந்தஸ்தும்:—

| | பெயர். ஸ்ரீமான்கள்.— | பூமி வரி. | வீட்டு வரி. | வருமானவரி. |
|---|---|---|---|---|
| 1 | ஷேக்தாவூத் சாயபு | 3306 | 2023 | 268 |
| 2 | முத்துகருப்ப செட்டியார் ... | 200 | 750 | 2000 |
| 3 | ரங்கராஜு ... | 500 | 1200 | 275 |
| 4 | சர்ஜீ காளிதாஸ்சேட் | | 290 | |
| 5 | சுப்ரமணியய்யர் ... | 700 | 200 | |
| 6 | செங்கோட கவுண்டர் | 300 | 150 | |
| 7 | நஞ்சப்ப செட்டியார் | வக்கீல் | | |
| 8 | பழனியப்ப செட்டியார் ... | 200 | 750 | 2000 |
| 9 | சுப்பன் | செங்கல் சூளை | | |
| 10 | சீனிவாச பிள்ளை ... | 500 | 200 | 130 |
| 11 | சதாசிவம் செட்டியார் | பென்ஷன் தாசில்தார் | | |
| 12 | சின்னப்ப முதலியார் | 40 | 350 | 80 |



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே

குடி அரசு.

அக்ஷய-௵ ஆவணி-௴ 13-உ

# தென்னாட்டு ஜமீன்தாரர்களுக்கு ஆபத்து.

—:o:—

சென்னை சட்ட சபைக்கு ஜமீன்தார்களின் நன்மையை உத்தேசித்து சில ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

அந்த ஸ்தானங்களுக்கு இதுவரையில் அது எந்த உத்தேசத்தைக் கொண்டு ஒதுக்கி வைக்கப்பட்டனவோ அதுபோலவே நபர்களும் தெரிந்தெடுக்கப்பட்டு வந்தனர்.

ஏறக்குறைய ஜமீன்தார்கள் என்கிற பாகுபாடு பெரும்பாலும் பழைய காலத்தில் அரசர்களாகவோ சிற்றரசர்களாகவோ பெரிய பாளையப்பட்டுகளாகவோ அரசாங்க பொறுப்பை வகித்தவர்களாகவோ மிக்க பெருமையோடு வாழ்ந்த குடும்பங்கள் என்பதாகவோ இருந்த சமூகத்தை, ஆங்கில அரசாக்ஷி ஏற்பட்ட பிறகும் அவர்களை அந்நிலைமையிலேயோ அல்லது அந்த சமூகத்தின் ஞாபகக் குறிப்பாவது இருக்கும்படியாகவோ கருதி நமது அரசாங்கத்தார் அவர்களை கௌரவிக்கும் முகத்தான் அவர்களுக்கென்று பல சட்ட திட்டங்களும் சலுகைகளும் கொடுத்து கூடியவரை அவைகள் மறைந்து போவதற்கில்லாமலும் அந்தந்த குடும்பங்களுக்கு ஒரு தனி கௌரவம் இருக்கும்படியாகவும் செய்து வருகிறார்கள்.

இதன் பலனாகவே நமது சென்னை சட்ட சபைக்கும் இந்த ஜமீன்தாரர்களின் நன்மையையும் அவர்களது கௌரவத்தையும் தனியே உத்தேசித்து அவர்களுக்கென்று சில ஸ்தானங்கள் ஒதுக்கி வைத்து அவைகளுக்கு ஓட்டர்களையும் அந்தக் கூட்டத்தார்களுக்குள்ளாகவே ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள்.

இதுவரையிலும் ஏறக்குறைய அந்த ஸ்தானங்களுக்கு அந்த சமூகத்தாரிலேயே தெரிந்தெடுக்கப்பட்டும் வந்திருக்கிறார்கள். இந்த ஜமீன்தார் சமூகம் ஆதியில் கண்டிப்பாய் பார்ப்பனரல்லாதார்களாகவே ஏற்பட்டுப் போய்விட்டதாலும் இவர்களுக்கு நாட்டில் பெருத்த செல்வாக்கு இருப்பதோடு இது சமயம் நாட்டின் பெரும்பான்மையான பார்ப்பனரல்லாத சமூகத்திற்குத் தலைவர்களாகவும் அக்கூட்டத்தாரிலேயே பலர் ஏற்பட்டுவிட்டதாலும் அத்தலைவர்களும் தாங்கள் வெறும் போக போக்கியமே ஜமீன்தார் தத்துவம் என்று எண்ணாமல் தங்கள் சமூகத்தாரும் ஆதியில் தங்கள் ஆளுகையில் இருந்தவர்களுமான பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு உழைக்க வேண்டும் என்கிற எண்ணங் கொண்டவர்களுமாகி தைரியமாய் உழைக்க அவர்கள் இப்போது வெளியில் வந்து விட்டதாலும் நமது பார்ப்பன சகோதரர்களுக்கு இது பொறுக்காமல் இதுவரை பல ஜமீன்களுக்குத் தாங்கள் மந்திரிகளாகவோ ஜமீன்தாரர்களுக்கு தாங்கள் காரியதரிசிகளாகவோ இருந்து அவர்களில் சிலரை கூடா ஒழுக்கங்களில் சம்பந்தப்படுத்தியும் விவகாரங்களில் இழுத்துவிட்டும் அவர்களை கடன்காரர்களாக்கவும் அதின் மூலம் ஜமீன்களை இழக்கவும் செய்து அவற்றைத் தாங்களே விலைக்கு வாங்கி ஜமீன்தார்களுமாகி இன்னமும் கொஞ்ச நஞ்சம் மீதி இருப்பவைகளையும் அடியுடன் ஒழித்து அந்த மரியாதை சொத்து சுகங்களையும் தாங்கள் கைப்பற்றி இருப்பதும்போக ஜமீன்தாரர்களுக்கு தாங்களே பிரதிநிதியுமாக வேண்டும் என்கிற எண்ணம் கொண்டு இப்போது இதிலும் சூழ்ச்சி செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

அஃதென்னவென்றால் சென்னை, செங்கல்பட்டு, நெல்லூர் முதலிய ஜில்லாக்களின் சார்பாய் ஜமீன்தார் தொகுதிக்கு இதுவரை தெரிந்தெடுக்கப்பட்டு வந்த பனகால் ராஜா அவர்கள் இது சமயம் தென்னாட்டு மக்களின் நன்மைக்கென ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனத்திற்கு தலைவராயிருப்பதாலும் அவருடைய தலைமை ஸ்தானத்தை பார்ப்பனரல்லாத மக்களில் இரண்டொரு பார்ப்பன சிஷ்யர்கள் தவிர மற்றெல்லா பார்ப்பனரல்லாதாராலும் ஒப்புக் கொள்ளப்படுவதினாலும் இப்படிப்பட்ட தலைவர் மறுபடியும் தெரிந்தெடுக்கப்பட்டு சட்ட சபைக்குப் போவாரானால் அங்கு பார்ப்பன சூழ்ச்சிகள் மிகுதியும் பாதிக்கப்பட்டு விடும் என்றும் பார்ப்பனரல்லாதார் சமூகம் சுயமரியாதையும் முன்னேற்றத்தையுமடைந்து விடும் என்றும், ஜமீன் முழுதையும் பார்ப்பன ஜமீனாக்க முடியாதென்றும் கருதி ஆத்திரப்பட்டு எப்படியாவது அவரை இந்தத் தடவை சட்டசபைக்குத் தெரிந்தெடுக்க வொட்டாமல் செய்வதற்காக அவருக்கு விரோதமாய் ஒரு பார்ப்பனர் நிற்பதற்கு தந்திரத்துடனும் சூழ்ச்சிகளுடனும் வெகு மும்முரமாய் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அதென்னவென்றால் தத்துவத்தில் எவ்விதத்திலும் ஜமீன்தார்களின் பிரதிநிதி என்று சொல்லிக் கொள்ளுவதற்கு அருகதையில்லாத ஸ்ரீமான் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் என்கிற ஒரு பார்ப்பன வக்கீல் பனகால் ராஜாவை சட்டசபைக்குத் தெரிந்தெடுக்கப்படாமல் செய்வதற்காக அந்த ஸ்தானத்திற்குப் போட்டி போடப் போகிறார். இதை உத்தேசித்தே 4, 5, மாதங்களுக்கு முன்பாக ௵ 1-க்கு சுமார் 2-3-ஆயிரம் ரூபாய் வரும்படி வரத்தக்க ஒரு சிறிய மிட்டாவை சொல்ப தொகைக்கு விலைக்கு வாங்கி ஜமீன்தார் கூட்டத்தில் தானும் ஒரு ஓட்டராகப்பதிவு செய்து கொண்டும் ராஜாவுக்கு எதிராக போட்டி போடத் தீர்மானித்துக்கொண்டும் வேலை செய்து வருகிறார்.

இந்த தொகுதிக்கு மொத்தம் ஓட்டுகள் சுமார் எண்பத்தி ஐந்தேதான். இவற்றில் பார்ப்பன ஓட்டர்களின் சங்கியை 20-அல்லது 22 இருக்கும். இந்த இருபது பேர் பார்ப்பனர்களாய் உள்ள கூட்டத்தார் இந்த ஸ்தானத்திற்கு நின்று 65-பேர் பார்ப்பனரல்லாதாராயிருக்கும் ஜமீன்தார் கூட்டத்தாரை அவர்கள் மூளையில்லாதவர்கள் என்றும் தன் வக்கீல் ஆதிக்கத்தில் கட்டுப்பட்டவர்களென்றும் எண்ணி சுலபமாய் ஏமாற்றி ஸ்தானம் பெற்று பார்ப்பனரல்லாதாரை ஒழித்துவிடலாம் என்கிற தைரியத்தின் பேரில் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு ஸ்ரீமான்கள் எஸ். சீனிவாசய்யங்கார், டி. வி. வெங்கிட்டராம சாஸ்திரியார், சி. பி. இராமசாமி அய்யர் போன்ற பிரபல பார்ப்பனர்கள் எல்லாம் உள் உளவாய் இருந்து கொண்டு வேலை செய்தும் வருகிறார்கள். தென்னாட்டு ஜமீன்தாரர்கள் தொகுதிக்கு ஒரு பார்ப்பனர்-அதிலும் வெகு சாதாரண பஞ்சாங்கப் பார்ப்பன குடும்பத்தைச் சேர்ந்தவர்—ஜமீன்தாரர்கள் கெடுவதினாலேயே பிழைக்க வேண்டியவராயுள்ள ஒரு வக்கீல்-ஜமீன்தாரர்கள் எல்லோரும் முட்டாள்கள் புத்தியில்லாதவர்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பவர்—ஜமீன்தார்கள் ஒற்றுமையாகவோ மேன்மையாகவோ விவகாரவில்லங்களுக்கு மார்க்கமில்லாமலோ வாழ்வதாயிருந்தால் தங்களுக்கு வரும்படியில்லாமல் பட்டினி கிடக்க வேண்டியவரான வக்கீல் கூட்டத்தைச் சேர்ந்தவர்—ஜமீன்களும் ஜமீன் மைனர்களும் தப்பு வழியிலும் கூடா ஒழுக்கத்திலும் நடந்தால் தான் தங்கள் சமூகத்தார் பெரும்பாலும் காலக்ஷேபம் செய்யலாம் என்கிற நிலையில் உள்ள வகுப்பைச் 'சேர்ந்தவர்—அன்றியும் எவ்வளவு பெரிய கல்வி, புத்தி, ஒழுக்கம், பரம்பரை கண்ணியம் உள்ள ஜமீன்தாரானாலும், பார்ப்பனரல்லாதார் என்கிற காரணத்தால் 'சூத்திரன்' 'வேசிமகன்' என்றும், ஒரு அயோக்கியனாயிருந்தாலும் மற்றும் எவ்வளவு கூடா ஒழுக்கக்காரனாயிருந்தாலும் கூட 'பிராமணன்,' 'உயர்ந்தவன்' என்று சொல்லிக் கொள்ளுபவராகவும் இருக்கிற ஒருவர் நம் நாட்டுப் பழம் பெருங்குடி மக்களான ஜமீன்தார் கூட்டத்திற்கு பிரதிநிதியாக முன் வந்திருக்கிறார் என்றால் இப்பார்ப்பனர்களின் தைரியத்தையும் துணிவையும் நாம் என்னவென்று சொல்லுவது? இது கேவலம் தான் வக்கீலாயிருப்பதாலும், தனனுடைய வக்கீல் தொழில் மாய்கையில் ஜமீன் குடும்பங்கள் தனக்கு அடிமையாய் கட்டுப்பட்டு கிடக்கிறது என்கிற அகம்பாவத்தாலும் இவ்வளவு முக்கியமான ஸ்தானத்தின் யோக்கியதையை அழிக்கத் துணிந்து விட்டாரென்றே சொல்ல வேண்டும்.

வக்கீல்கள் என்றால் ஜமீன்தாரர்கள் பயப்படும் காலமெல்லாம் மலையேறிப்போய்விட்ட

து என்பதையும் வக்கீல் கூட்டத்திற்கு யோக்கியதை போய்விட்டது என்பதையும் தாசிகள் போல் வக்கீல்களும் தரகர்களை வைத்தோ வாசற்படியில் காத்துக் கொண்டிருந்தோ கக்ஷிக்காரர்களை தேடிப்பிடிக்க வேண்டிய நிலைமை வந்து விட்டதென்பதையும் இவர் மறந்து விட்டார் போலும். இவர் எதற்காக ஜமீன்தார் தொகுதிக்கு நிற்கிறார்? ஜமீன்தார் நன்மையில் இவருக்கு என்ன அனுதாபம் உண்டு? ஜமீன் குடும்பத்தின் பெருமையையும் கட்டுப் பாட்டையும் காப்பாற்ற இவருக்கு என்ன யோக்கியதை உண்டு? அந்தக் குடும்பங்கள் ஒழியாமலும் அந்த சொத்துக்கள் காப்பாற்றப் படாமலிருப்பதை காப்பாற்றவும் இவருக்கு எந்த விதத்தில் அக்கறை உண்டு. பழைய ஜமீன் குடும்பங்களின் தர்மம், தானம் பரோபகாரம் முதலியவைகள் இவருக்குண்டா? சுயமரியாதை தத்துவத்தை காப்பாற்ற முடியுமா? பார்ப்பனர்களுக்கு எந்தப் பதவி கிடைத்தாலும் தங்கள் இயற்கை சுபாவம் எப்படி மாறும்?

உதாரணமாக புதிய சீர்திருத்தத்தின்படி ஜமீன்தார் தொகுதிக்கென்று தனியாக ஸ்தானங்கள் பிரிந்த காலத்திலேயே ஜமீன்தாரர்கள் மற்ற சாதாரண ஓட்டர்களைப் போல் போலிங் ஸ்தானத்திற்கு வந்து வோட்டு போடும்படியாய் இல்லாமல் ஓட்டுச் செய்யும் கடுதாசிகளை ஜமீன்தாரர்களுக்கே நேரில் போய்ச் சேரும்படி தபாலில் அனுப்பி அவர்கள் ஒரு சமயம் அயலூரிலிருந்தாலும் ஓட்டுசெய்து திரும்பவும் தபாலிலேயே அனுப்பிவிடும்படியான சௌகரியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி இருப்பதை நமது ஸ்ரீமான் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள், "சுக்கிலாம்பரதரம்" என்கிற போதே கண்ணைப்பார்த்து குட்டிக்கொள்வதுபோல், இந்த சுதந்திரம் ஜமீன்தாரர்களுக்கு வேண்டியதில்லை; ஜமீன்தாரர்கள் போலிங் ஆபீசுக்கு போய் அங்கிருந்துதான் தன்னுடைய ஓட்டுகளைக் கொடுக்க வேண்டும் என்கிற ஏற்பாடு செய்வதற்காகவேண்டிய சூழ்ச்சி செய்து, இதை ஜமீன்தாரர்களே கேட்டுக் கொள்வதுபோல் விண்ணப்பம் எழுதி தனக்குக் கட்டுப்பட்ட ஜமீன்தாரர்கள் சிலரிடம் கையெழுத்து வாங்கி சர்க்காருக்கு அனுப்பிவிட்டாராம். இந்த அய்யர் என்கிற வார்த்தையை நம்பி ஏமாந்த ஜமீன்தாரர்களில் ஜயபூர் மகாராஜாவும் ஒருவர் என அறிகிறோம். பிறகு இரண்டொரு ஜமீன்தாரர்களுக்கு இந்த விஷயம் வெளியானதின் பேரில் பழையபடியே இருக்கட்டும் என்று சர்க்காரை கேட்டுக் கொண்டதினால் ஜமீன்தாரர்கள் கௌரவம் ஸ்ரீமான் அய்யர் என்கிற ஜமீன்தார் சூழ்ச்சியிலிருந்து தப்புவிக்கப்பட்டதாம். தபால் மூலம் ஓட்டு அனுப்பும் சுதந்திரம் சாதாரண ஆசாமிகளாகிய யூனிவர்சிட்டி பட்டம் பெற்றவர்களுக்கு கூட இருக்கிறது. அதாவது ஒரு மனிதன் பி. எ. பாஸ் செய்து மீ 35 ரூபாயுக்குத் தன் மனச் சாட்சியை விற்றுக் கொண்டிருக்கிறவனாயிருந்தாலும அவனுக்கு ஓட்டுக்காகிதம் தபாலில் வரும்படி ஏற்பாடு செய்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏன்? இந்தக் கூட்டத்தார் முக்காலே மூன்று வீசமும் பார்ப்பனர்களாயிருப்பதால் தங்களுக்கு இந்த கௌரவம் வேண்டும். ஜமீன்தாரர்கள் பெரும்பாலும் பார்ப்பனரல்லாதாராயிருக்கிற படியால் அவர் ஓட்டு எடுக்குமிடத்திற்குப் போய் ஒரு மாதம் 35 ரூபாய் பார்ப்பனன் முன்னால் கை கட்டிக் கொண்டு ஓட்டுப்போட வேண்டும் பேசலும் ஓட்டுப் போடுகிற இடத்திற்கு வந்தால் அங்கு உள்ள பார்ப்பனரைக்கொண்டு தந்திரம் செய்து தனக்கு அனுகூலமாய் ஓட்டு வாங்கிக்கொள்ளலாம் என்கிற ஆசையின் பேரில் ஜமீன்தாரர்களின் கௌரவமே குறைந்தாலும் பாவாயில்லை என்று துணிந்து இந்த சுதந்திரத்தையும் சுய மரியாதையையும் இழக்கத் துணிந்தார் என்றால் இதுபோலவே மற்ற காரியங்களும் தங்கள் சுய நலத்திற்காக இன்னும் என்ன என்ன உரிமைகளை இழக்கத் துணியமாட்டார்; மற்றவர்களையும் ஏமாற்றமாட்டார் என்பதை ஜமீன்தாரர்கள்தான் உணரவேண்டும்.

ஆதலால் வரப்போகும் தேர்தலில் இந்த தொகுதியைச் சேர்ந்த ஜமீன்தாரர்கள் எப்பாடு பட்டாவது ஜமீன்தார் தொகுதி ஸ்தானத்திற்கு உண்மையாகவும் பரம்பரியமாகவும் சுயமரியாதையிலும் ஜமீன்தாரர்களின் உரிமைகளில் கவலையுள்ளவர்களாகவும் பார்த்தே தெரிந்தெடுத்தனுப்பி தங்கள் சமூகத்தின் யோக்கியதையைக் காப்பாற்றி முற்போக்கடைய பாடுபட வேண்டுமே யல்லாமல் "மகன் செத்தாலும் சம்மதம், மருமகள் தாலி அறுபட்டால் போதும்" என்கிற கொள்கைப்படி துவேஷத்தை முன்னிட்டோ பொறாமையை முன்னிட்டோ சொந்த அபிப்பிராய பேதத்தை முன்னிட்டோ தங்கள் கடமைகளையும் தர்மத்தையும் அலக்ஷியம் செய்து பார்ப்பனரையோ வக்கீல்களையோ தெரிந்தெடுக்க நினைத்து தங்கள் சமூகத்தையும் பாரம்பரியமாய் தங்களுக்கிருந்துவரும் கண்ணியத்தையும் சுயமரியாதையையும் இழந்து விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றே கேட்டுக் கொள்ளுகிறோம். தற்காலம் நமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்தை ஒழிப்பதற்கு நமது பார்ப்பனர்கள் செய்யும் சூழ்ச்சி அறியாதார் யாரும் இல்லை. இப்படியிருக்க நமது ஜமீன்தார் சமூகத்திற்கு இந்த தகவல் எட்டியிருக்காது என்று நினைத்துக்கொண்டு பார்ப்பனரல்லாதாரின் முற்போக்குக்கு இடையூறு செய்ய நமது பார்ப்பனர்கள் ஜமீன்தார் சமூகத்தைப் பிடிப்பது பைத்தியகாரத்தனமென்றே சொல்லுவோம். நமது நாட்டு பண்டைப் பெருமையையும் பண்டை இலக்கியங்களையும் காட்டுவதற்கு அந்த ஒரு (ஜமீன்தார்) சமூகம்தான் இருக்கிறது. அதிலும் கையை வைத்து அதையும் ஒழித்துவிட்டால் பிறகு வெகு சுலபமாய் பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்துவது பார்ப்பனருக்கு அனுகூலமாய் போய்விடும். ஆதலால்தான் இப்போது அதில் கையை வைக்க ஆரம்பித்துவிட்டார்கள். இதுவரையில் அவர்கள் செய்துவந்த சூழ்ச்சிகளின்பலனாக நமக்கு ஆச்சாரியார் என்னும் மதத் தலைவர்கள் பார்ப்பனர், அரசியல் தலைவர் பார்ப்பனர், நியாயாதிபதி பார்ப்பனர், நியாயவாதிபார்ப்பனர், உபதேசகர்த்தா பார்ப்பனர், உபாத்தியாயர் பார்ப்பனர், உத்தியோகஸ்தர் பார்ப்பனர், வைத்தியர் பார்ப்பனர், வைதீகச் சடங்கு செய்யும் வாத்தியார் பார்ப்பனர், நம்மையும் நம் பெற்றோர்களையும் மோக்ஷத்திற்கனுப்புபவர் பார்ப்பனர், சங்கீதவித்வான் பார்ப்பனர், நாட்டிய வித்துவான் பார்ப்பனர், தமிழ் வித்துவான் பார்ப்பனர், தமிழ் சங்கத் தலைவர் பார்ப்பனர், சோறுவிற்கும் ஓட்டல்காரர் பார்ப்பனர், சிற்றுண்டி விற்பவர்பார்ப்பனர், தூது செல்வோரும் பார்ப்பனராகவே இருந்து அரசியல் மதவியல் சமூகவியல் கலைகளின் இயல் நித்திய வாழ்கையின் இயல்கள் ஆகிய எல்லாவற்றிலும் ஆதிக்கமடைந்து விட்டார்கள். செல்வத்திலும் ஆதிக்கம் பெற்று வருகிறார்கள். ஆனால் நாம் முன் சொன்னதுபோல் நமது பழங்கால பெருமையைக் காட்டும் ஜமீன்தார்கள் மகாராஜாக்கள் ஆகிய இவைகளில் இவர்களின் ஆதிக்கம் இதுவரை வளராமல் இருந்து வந்தது. இப்பொழுதுதான் மெள்ள மெள்ள அவைகளிலும் கையை வைக்கத் துணிகிறார்கள். ஜமீன்தார் பிரபுக்களே! இன்று இப்பார்ப்பனர் பசப்பு வார்த்தையைக் கேட்டு ஏமாந்து போய்விட்டால் நாளைபதினம் என்ன பாடு பட்டாலும் வாராது. ஆதலால் இவ்விஷயத்தில் ஒவ்வொரு ஜமீன்தாரர்களும் தங்கள் சுயமரியாதையையும் கண்ணியத்தையும் காப்பாற்றிக் கொள்வார்களாக.

---

## யாரை யார் மோசஞ் செய்தார்கள்?

ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் சென்னையில் ஒரு கூட்டத்தில் பேசும்போது "பார்ப்பனராகிய நான் யாரையும் ஏமாற்ற வில்லை, பார்ப்பனரல்லாதாராகிய ஈ. வெ. ராமசாமி நாயக்கர் என்னை ஏமாற்றி விட்டார்" என்று சொன்னாராம். நாயக்கர் எந்த விதத்தில் ஸ்ரீமான் அய்யங்காரை ஏமாற்றினார் என்பதையும் கூடவே சொல்லியிருந்தால் கண்ணியமாயிருந்திருக்கும். அப்படிக்கில்லாமல் பொதுப்படையாய்ச் சொல்லுவது விஷமத்திற்காக என்றேதான் சொல்ல வேண்டும். ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் திருச்சியில் கூட்டிய மாகாணக் காங்கிரஸ் கமிட்டி பொதுக் கூட்டத்தில் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுகாரவர்கள் பார்ப்பனரல்லாதார் வகுப்புவாரி பிரதிநிதித்துவ விஷயமாய் ஒரு தீர்மானம் கொண்டு வந்த சமயத்தில் நாயுடுகாரைப் பார்த்து "எப்படியாவது இந்த தீர்மானத்தை இது சமயம் வாபீசு வாங்கிக் கொள்ளுங்கள்; மூன்று மாதம் பொறுத்தவுடன் இதற்கு நான் வகை செய்கிறேன்," என்று சொல்லி நாயக்கரையும் ஸ்ரீமான் நாயுடுகாரையும் கெஞ்சி நம்பச் செய்து அதைப்பின் வாங்கிக் கொள்ளும்படி செய்தார்.

காஞ்சீபுரம் மகாநாட்டில் நாயக்கரும் ஸ்ரீமான் இராமநாதனும் வகுப்புவாரி பிரதிநிதித்துவ தீர்மானம் கொண்டு வந்த சமயத்திலும் வெளிப்படையாய் மகாநாட்டில பிரேரேபிக்க அக்கிராசனர் வசம் தீர்மானம் ஒப்படைத்த சந்தர்ப்பத்தில் நாயக்கரை ஸ்ரீமான் அய்யங்கார் தனியாய் கூட்டிவைத்து இது சமயம் இதை

வலியுறுத்தாதீர்கள். மூன்று மாதத்தில் எல்லாம் சரிப்படுத்தி விடுகிறேன் என்று உறுதி கொடுத்தார். இதற்கு சாட்சி ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார் அக்கிராசனராக ஸ்ரீமான் நாயுடுகாரால் பிரேரேபித்து ஆமோதித்து நிறைவேறியபின் தீர்மானம் சபையோரால் அங்கீகரிக்கப்பட்டதாய் ஏற்பட்ட பின்பும் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் எழுந்து நின்று சபையோரைப் பார்த்து "நீங்கள் எல்லாம் என்னைத் தெரிந்தெடுத்தாலும் ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் என்னுடைய தேர்தலை ஒப்புக்கொண்டதாக அவர் வாயால் சொன்னால்தான் நான் இந்த ஸ்தானத்தைஏற்றுக்கொள்ளுவேன்" என்று சொன்னார். அதுசமயம் ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடு, முதலியார் முதலியவர்களும் நாயக்கரைப் பார்த்து "ஒப்புக்கொண்டேன்" என்று சொல்லும்படி சொன்னதின்பேரில், நாயக்கர் எழுந்து பேசும்போது தீர்மானம் நிறைவேறிய பின்பு என்னை கேட்பதில் பிரயோஜனமில்லை. ஆனாலும் ஸ்ரீமான் அய்யங்கார் தலைவராய் இருப்பதில் தனக்கு ஆட்சேபணை இல்லை என்றும் ஸ்ரீமான் அய்யங்காரைவிட உயர்ந்தவர்களும் தாழ்ந்தவர்களும் இந்த ஸ்தானத்தில் இருந்திருக்கிறார்கள் என்றும், ஆனால் அய்யங்கார் இடத்தில் இதுசமயம் தனக்கு உள்ளமனவருத்த மெல்லாம்வகுப்புவாரி பிரதிநிதித்துவ விஷயத்தில் அய்யங்கார் வாக்கு தவறி இருக்கிறார் என்பதினாலேயேதான் என்றும், இனியாவது அவர் சொன்ன வாக்கைக் காப்பாற்றுவதானால் தானும் இத் தீர்மானத்தை ஒப்புக்கொள்ளுவதாகவும் சொல்லியிருக்கிறார். இதிலிருந்து சமயம் வரும்போது வாக்குத்தத்தமும் நம்பிக்கையும் கொடுத்து சமயம் தப்பினவுடன் மோசம் செய்கிறவர்கள் பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

ஸ்ரீமான் சி. பி. இராமசாமி அய்யர் சட்டசபைக்கு நிற்கும்போது பார்ப்பனரல்லாதாருக்கு நம்பிக்கை கொடுத்து அவர்கள் ஓட்டுப்பெற்று சர்க்கார் அடிமையாகி 5500 சம்பளமுள்ள உத்தியோகமும் பெற்று பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாய் நடப்பது பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்காக ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்டபோது சில பார்ப்பனரல்லாத இளைஞர்களைப் பிடித்து ஏமாற்றி தங்கள் வசப்படுத்திக் கொண்டு "வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கொள்கைகளை நாங்களும் ஒப்புக் கொள்ளுகிறோம்; ஆனால் ஜஸ்டிஸ் கக்ஷி சர்க்காருக்கு அனுகூலமாயிருக்கிறது; அதை ஒழிக்க வேண்டும்" என்று சொல்லி அந்தக்கக்ஷியும் அந்தக்கக்ஷிபத்திரிகையும் செல்வாக்கற்றுப் போகும்படி செய்து அது முடிந்த உடன் வேறு சில பார்ப்பனரல்லாத வாலிபர்களை சேர்த்துக் கொண்டு "நீக்கு பேப்பேப்பே, நீ தாத்தக்கு பேப்பேப்பே" என்று சொல்லி துரோகம் செய்வதுபார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

இம்மாதிரி தலைமுறை தலைமுறையாய் வழி வழி வம்சமாய் இனி பிறக்கப்போகும் பார்ப்பனரல்லாதாரைத் துரோகம் செய்வதற்கு இனி பிறக்கப்போகும் பார்ப்பனருக்குக்கூட ஆதாரம் தேடி வைப்பது பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

பனக்கால் ராஜாவிடம் போய் ஜில்லா போர்டு மெம்பர் வேலை வாங்கிக்கொண்டு மூன்றுவது நாளே பனக்கால் ராஜாவுக்கு விரோதமாய் நம்பிக்கை இல்லாத தீர்மானத்திற்கு ஓட்டு கொடுத்து அவருக்கு துரோகம் செய்தது பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

பார்ப்பனரல்லாதார் கட்டுப்பாட்டைக் கலைப்பதற்காக பார்ப்பனரல்லாதார் கூட்டத்தில் இருந்த ஒரு கனவானுக்கு நீதி இலாக்காவில் பெரிய உத்தியோகம் கொடுப்பதாய் வாக்களித்து ஆசை காட்டி அவரைக் கொண்டு பனக்கால் ராஜாவின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஓட்டுப்பெற்று பிறகு அவருக்கு வேலை கொடுக்காமல் அவருக்கு என்று வாக்களித்த உத்தியோகத்தை பார்ப்பனருக்கே கொடுத்துவருவதின் மூலம் பார்ப்பனரல்லாதாரை ஏமாற்றி துரோகம் செய்தது பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

பார்ப்பனரல்லாதாருக்கு சில உத்தியோகம் கிடைக்கவழி ஏற்பட்டவுடன் அரசியலில் இனியும் சீர்திருத்தங்கள் ஏற்பட்டு விட்டால் அதன் பலனாய் ஏற்படும் உத்தியோகங்கள் பார்ப்பனரல்லாதாருக்கு போய்விடுமே என்கிற குரோத புத்தியோடு எங்களுக்கு சீர்திருத்தமே வேண்டாமென்று சர்க்காருக்கு சொல்லுவது பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

கல்பாத்தி தெருவில் நடக்க சர்க்காரும் ஜனப்பிரதிநிதி சபை என்னும் சட்ட சபையும் ஒப்புக்கொண்ட பிறகு கூட, "வேலையிருந்தால்தான் போகலாம்" என்கிற வியாயாக்கியானம் செய்து பார்ப்பனரல்லாதாரின் சுயமரியாதையை ஒடுக்கிவைத்து அவருக்கு துரோகம் செய்துவருவது பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

எல்லைப்புறமகமதிய சமூகத்திற்கு மற்றபாகத்திற்கு அளிக்கப்பட்டிருக்கும்சீர்திருத்தத்திற்கு சமமாகவாவது பாரபக்ஷமில்லாமல் சீர்திருத்தம்அளிக்கவேண்டும் என்று கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு விரோதமாய் அதைஎதிர்த்து தோற்கடித்து அச்சமூகத்திற்கு துரோகம் செய்தது நம் நாட்டுப் பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

மகமதியச் சமூகத்திற்கு எவ்வளவோ கஷ்டப்பட்டு அநேக மகமதிய தலைவர்களால் சம்பாதிக்கப்பட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஒழிப்பதற்காக பொறுப்பற்ற இரண்டு மகமதிய வாலிபர்களை பிரதிப் பிரயோஜனம் கொடுத்து அமர்த்திக்கொண்டு மகமதியர்களுக்கு வகுப்புவாரிப்பிரதிநிதித்துவமே வேண்டாம் என்று சொல்லும்படி செய்து மகமதிய சமூகத்திற்கும் மதத்துக்கும் துரோகம் செய்வது பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

இந்தியா சட்டசபைக்கு கிறிஸ்தவசமூகத்திற்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாததால் மகமதியரல்லாத பொதுத் தொகுதியின் பேரால் நிற்கும் ஸ்ரீமான் வி. சக்கரை செட்டியார் அவர்களை பிராமணரல்லாத இயக்கங்களும் ஸ்தாபனங்களும் ஆதரித்தும் இந்தியா சட்ட சபைக்கு தமிழ் நாடு சார்பாய் ஏற்பட்டுள்ள ஸ்தானங்கள் 6-ல் 5-க்கு அய்யங்கார்களாகவே நின்றுகொண்டு கிறிஸ்தவர் என்பதைக்கூட பார்க்காமல் ஒரு அய்யங்கார் பார்ப்பனரே அதுவும் கிறிஸ்தவ சமூகத்திற்கு தான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாமலே அநுகூலம் செய்கிறேன் என்று சொல்லும் தலைவரே நின்றுகொண்டு அச் சமூகத்திற்கு துரோகம் செய்வது பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

இந்தக்கொடுமை செய்து கொண்டும் அச் சமூகத்திற்கு விரோதமாய் ஒரு கிறிஸ்தவ வாலிபரை விலைக்கு வாங்கிக் கொண்டு அவர் மூலம் தம் சமூகத்திற்கு வகுப்புவாரி உரிமையே வேண்டாமென்று சொல்லும்படி செய்து அச்சமூகத்திற்கு துரோகம் செய்வது பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

தொழிலாளர் சமூகத்துக்கு பாடுபடுவதாய் வேஷம் போட்டு அச் சமூகத்தை பல தந்திரங்களால் சுவாதீனம் செய்து கொண்டு அவர்களை ஏமாற்றி அவர்களுக்குத்தலைவராகியும் அவர்கள் ஓட்டுபெற்று பதவி அடைந்தும கர்ப்ப ஸ்திரீ தொழிலாளி ஸ்திரீகள் கர்ப்பவதியாயிருந்து பிள்ளை பெற்ற சமயத்தில்கூட சில நாள் ஓய்வு கொடுக்கக்கூடாது என்று சட்ட சபையில் வாதாடி அந்த நலத்தைக் கெடுத்து தொழிலாள சமூகத்திற்கும் பெண்கள் சமூகத்திற்கும் துரோகம் செய்தது நம் நாட்டு பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு நாங்கள் நன்மை செய்கிறோம் என்று வாயால் சொல்லிக்கொண்டு காரியத்தில் அச் சமூகத்தை இன்னமும் தாழ்மைப்படுத்த அச் சமூகத்திலேயே ஒரு பொறுப்பற்ற ஏழையை விலைக்கு வாங்கிக்கொண்டு அவரைக்கொண்டே தங்கள் சமூகத்திற்கு வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவ உரிமை வேண்டாம் என்று பிரசாரம் செய்யச் செய்து அச் சமூகத்திற்கு துரோகம் செய்து வருவது பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

குழந்தைப் பருவத்திலிருந்தே சுயமரியாதையையும் சமத்துவத்தையும் வளர்ப்பதற்காக ஒரு குருகுலம் ஆரம்பிப்பதாய் சொல்லி பொது மக்களின் சபையான காங்கிரசை நம்பச்செய்து 10 ஆயிரம் ரூபாய் சாங்கிஷன் செய்யப்பட்டு, பார்ப்பனரல்லாத ஒரு காங்கிரஸ் காரியதரிசி நிபந்தனை எழுதி பணம் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்ல, அவருக்குத் தெரியாமல் மற்றொரு பார்ப்பன காரியதரிசியைப் பிடித்து முறைக்கு விரோதமாக இரகசியமாய் 5000 ரூபாய்க்குச் செக்கு எழுதி ரூபாய் வாங்கிக்கொண்டுபோய் பார்ப்பனக் குழந்தை சாப்பிடுவதை பார்ப்பனரல்லாத குழந்தை பார்த்தால் பாவம் என்று இரு சார்பு குழந்தைகளுக்கும் மூளையிலிருந்தே வித்தியாசம் கற்பித்து பார்ப்பனரல்லாதாரை நிரந்தரமாய்த் தாழ்த்துவதற்காக அந்தப்பணத்தை உபயோகித்த துரோகத்தை செய்தது பார்ப்பனரா! பார்ப்பனல்லாதாரா?

காங்கிரசில் தீண்டாமை ஒழிப்பது என்கிற தத்துவத்தை எல்லாரும் ஒப்புக்கொள்வதாய்ச் சொல்லி பார்ப்பனரல்லாதாரை யெல்லாம் காங்கிரசில் சேர்த்து ஜயிலுக்குப் போகச்செய்து, மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை என்று தீர்மான

மூலமாய்ச் சொன்னவுடன் ராஜீநாமா கொடுத்து வெளியில் போய் மகாத்மா காங்கிரசையே ஒழித்து பார்ப்பனக் காங்கிரசாக்கி தேசத்திற்கும் பார்ப்பனரல்லாத சமூகத்திற்கும் துரோகம் செய்தது பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை, எல்லோரும் சமம் என்று சொல்லி, பார்ப்பனரல்லாதார் ஓட்டுப் பெற்று இந்தியா சட்டசபைக்குப் போய் பிரயாணச் செலவின் பேரால் ஆயிரக்கணக்கான ரூபாய்களை சம்பாதித்துக் கொண்ட பிறகு ஒரு பார்ப்பனக் குழந்தை சாப்பிடுவதை ஒரு பார்ப்பனரல்லாத குழந்தை பார்த்து விட்டால் தான்ஒரு மாதம் பட்டினி கிடப்பேன்என்று சொல்லி பார்ப்பனரல்லாதாரை இழிவுப்படுத்தி துரோகம் செய்தது பார்ப்பனரா? பார்ப்பனரல்லதாரா?

மகாத்மா காந்தியடிகளின் கொள்கைக்கு "இந்து"பத்திரிகையும் "சுதேசமித்திரன்" பத்திரிகையும் விரோதமாய் பிரசாரம் செய்வதால் காங்கிரசில் ஒரு பத்திரிகை இருக்க வேண்டும் என்று சொல்லி காங்கிரஸ் பணத்திலும் 10000 ரூபாய் பெற்று பார்ப்பனரல்லாதாரிடமும் பதினாயிரக் கணக்கான ரூபாயிக்கு பங்குகள் விற்று பணம் பெற்று 'சுயராஜ்யா' என்ற பத்திரிகை ஆரம்பித்து "அவன் போனால் கலகமாகிவிடும், நான் போனால் செருப்பாலடித்து விட்டு வருகிறேன்" என்று சொல்லுவதுபோல் 'இந்து' 'சுதேசமித்திர'னுக்கு விரோதமாய் பிரசாரம் செய்வதாய் சொல்லி இப்போது அவைகளுக்கு மேலாக பார்ப்பனரல்லாத சமூகத்திற்கு விரோதமாயும் மகாத்மாகாந்தியின் காங்கிரசை ஆழக்குழியில் போட்டு புதைப்பதற்கும் வேலை செய்துகொண்டு பங்குக்காரர்களையும் பங்கு சேர்த்துக் கொடுத்தவர்களையும் வைத்து கொண்டு அச்சமூகத்திற்கே துரோகம் செய்து வருவது பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதாரா?

"ஆகையால் தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்" என்பது போல் தன்னுடைய சம்பள சிப்பந்திகளை வைத்துக்கொண்டு தன்னிஷ்டப்படி பேசி பத்திரிகையில் பார்ப்பனரல்லாதார்பார்ப்பனருக்கு துரோகம் செய்து விட்டார்கள் என்று சொல்லுவது எவ்வளவு நன்றிகெட்டத்தனம்? ஒவ்வொரு பார்ப்பனரும் தனியாய் நின்று கொண்டு தங்கள் வாழ்வுகளையும் தங்கள் செல்வங்களையும் போக போக்கியங்களையும் நன்றாய்க் கவனித்து இதெல்லாம் யாரை ஏமாற்றி அனுபவிக்கிறோம், யாரை துரோகம் செய்து அனுபவிக்கிறோம், எவ்வித நன்றி கெட்ட தன்மையாய் அனுபவிக்கிறோம் என்று அவர்கள் நிதானமாய் யோசித்தால் விளங்காமல் போகாது.

---

## சென்னை சட்ட சபை.

திருச்சி, ஸ்ரீரங்கம் நகரத் தொகுதியின் சென்னை சட்ட சபை ஸ்தானத்திற்குத் தான் ஒரு அபேக்ஷகராக நிற்பதாக திருச்சி முனிசிபல் சேர்மென் திரு. பி. இரத்தினவேலு தேவர் நமக்கு அறிவிக்கிறார்.

## நமது துணை ஆசிரியர் விலகுகிறார்.

"குடி அரசு"க்கு துணை ஆசிரியராயிருந்து வரும் திருவாளர் மணவை ரே. திருமலைசாமி செப்டெம்பர் மாதம் 1-ம் தேதி முதல் நமது ஆசிரியர் குழாத்திலிருந்து விலகுகிறார். இனி அவர் ஐப்பசி மாதம் முதல் திருசிரபுரத்திலிருந்து அரசியல், இலக்கியம், சமத்துவம் ஆகிய துறைகளில் நின்று "சிவாஜி" என்ற பெயரை மருவி ஏழை மக்களின் தோழனாய் வெளிவரப்போகும் வாரப் பத்திரிகையின் ஆசிரிய பீடத்தை ஏற்றுக் கொள்ளுவார்.

இற்றைவரை "குடி அரசு" காரியாலயமிட்டு அவருக்குக் கடிதம் முதலியன எழுதிவந்த அன்பர்கள் இனி திரு. மணவை. ரெ. திருமலை சாமி, காஜாப்பேட்டை, திருச்சிராப்பள்ளி., என்ற விலாசத்திற்கு எழுதுமாறு தெரிவித்துக் கொள்ளுகிறோம். ப—ர்.

---

## "நவசக்தி" ஆபீசில் பிராமண எலி.

இவ்வாரம் "நவசக்தி" பத்திரிகையில் ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் காங்கிரஸ் கமிட்டியிலிருந்து விலக்கப்பட்டார் என்று எழுதியிருக்கிறது. ஆனால் முழுதும் பிராமணப் பெருச்சாளிகளாகவேயிருக்கிற "சுதேசமித்திரன்" பத்திரிகையில் 15-வது விதியின்படி ஸ்ரீமான் நாயக்கர் கமிட்டி அங்கத்தினராயிருக்க முடியாததால் அவர் கமிட்டியிலிருந்து விலகினதாகக் கருதப்படுகிறார். ஆகையால் அவருக்குப் பதிலாக வேறொருவரை நியமிக்கப்பட்டிருப்பதாக தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியால் தீர்மானித்திருப்பதாய்க் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க "நவசக்தி"யிலுள்ள எலிக்கு நாயக்கர் விலக்கப்பட்டார் என்கிற தகவல் எங்கிருந்து கிடைத்ததோ தெரியவில்லை. பார்ப்பன எலிக்கு எப்படியாவது கடுகத்தனை இடம் கிடைத்துவிட்டால் அது மலையத்தனை விஷமம் செய்யும் என்பதை பொதுமக்களுக்கு அறிவிக்க இதை ஒரு சந்தர்ப்பமாக உபயோகப் படுத்திக் கொள்ள இங்கு குறிப்பிட நேர்ந்ததற்கு வருந்துகிறேன். விலகினதாகக் கருதப்படுகிறார் என்கிற வார்த்தைக்கும் விலக்கப்பட்டார் என்கிற வார்த்தைக்கும் "நவசக்தி" எலிக்கு வித்தியாசம் தெரியாமல் போகவில்லை. ஆனால் "நவசக்தியின்" தலைமை ஆசிரியருக்குத் தெரியாமல் எலி தன் விஷமத்தைக் கொட்டியிருக்கிறது. எஸ். ஏ. கணேசன்.

---

## சென்னை சட்ட சபை.

திருச்சி-ஸ்ரீரங்கம் நகரத் தொகுதியின் சென்னை சட்ட சபை ஸ்தானத்திற்குத் தான் ஒரு அபேக்ஷகராக நிற்பதாக "தமிழர்" ஆசிரியர் திருச்சி திரு. உ. க. பஞ்சரத்தினம் பிள்ளை நமக்கு அறிவிக்கிறார்.

## ஸ்ரீமான் ஒ. கந்தசாமி செட்டியாரிடத்தில் பார்ப்பனர்களுக்குள்ள அபிமானம்.

ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்காருக்கு ஸ்ரீமான் ஒ. கே. கந்தசாமி செட்டியாரிடம் அனுதாபமிருந்து அவரை முனிசிபல் கவுன்சிலராக்கவேண்டும் என்கிற எண்ணம் இருக்குமானால் பார்ப்பனர்கள் ஓட்டு அதிகமாயிருக்கும் திருவல்லிக்கேணி வார்டில் போட்டு கவுன்சிலர் பதவியை ஏன் அவருக்கு செய்துவைத்திருக்கக்கூடாது? பட்டத்தையும் விட்ட "பரிசுத்தமான ஒத்துழையாத்துவம் கொண்ட காங்கிரஸ் வாதி" இப்போது ஸ்ரீமான் அய்யங்கார் கூட்டத்தில் நமது ஸ்ரீமான் கந்தசாமி செட்டியாரை விட வேறு யார் இருக்கிறார்கள்? அல்லாமலும் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சாஸ்திரிகள் இன்னமும் இதற்கு முன்னும் வக்கீல் உத்தியோகம் செய்து வருகிறார். சர்க்கார் நியமன பதவிகளும் சிலவற்றை வைத்துக்கொண்டிருக்கிறார். இவரை விட ஸ்ரீமான் செட்டியார் எந்த விதத்தில் குறைந்தவர்? அல்லாமலும் இந்த பார்ப்பனர் வார்த்தையைக் கேட்டு நடந்ததின் பலனாக பார்ப்பனரல்லாத சமூகத்தில் செட்டியாருக்கு இது சமயம் செல்வாக்கும் குறைந்துபோயிருக்கிறது. இந்த விஷயம் சேப்பாக்கம் டிவிஷனில் செட்டியார் தோல்வியுற்றதினாலும் ராயபேட்டை டிவிஷனுக்கு பட்டம்விட்ட நமது செட்டியாரைப் போடாமல் பட்டம் தாங்கும் ஸ்ரீமான் ராவ் பகதூர் ஒ. ஏ. ஒ. கே. லக்ஷ்மணன் செட்டியாரை இவர்களே (பார்ப்பனர்கள்) போட்டதினாலேயும் நன்றாய் விளங்குகிறது. ஆதலால் பார்ப்பனர் அதிகமாயுள்ள வார்டுக்கு இவரை என் போடவில்லை? இதுதான் போகட்டும். சட்டசபைத் தேர்தலிலாவது இந்த பார்ப்பனர்களுக்கு நமது ஸ்ரீமான் கந்தசாமி செட்டியாருக்கு ஒரு ஸ்தானம் கிடைக்கச் செய்ய வேண்டுமென்றிருந்தால் பார்ப்பனர்கள் மிகுதியுள்ளதும் கண்டிப்பாய் பார்ப்பனர் சொல்லுகிறபடி ஓட்டுக்கிடைப்பதுமான யூனிவர்சிட்டி தொகுதிக்கு என் நிறுத்தக்கூடாது. ஸ்ரீமான் சத்தியமூர்த்தி படிப்பையும் அனுபோகத்தையும் விட ஸ்ரீமான் செட்டியார் எந்த விதத்தில் தாழ்ந்தவர்? இவற்றை யோசிக்கும்போது "உங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன கொடுக்கிறாய்? எங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன கொண்டு வருகிறாய்"! என்ற பழமொழிபோல் இதைப் பார்ப்பனர்களின் சாவகாசம் என்பது இதிலிருந்தாவது விளங்கவில்லையா?

---

## பெரிய இடத்துக் கலியாணம்.

கோயமுத்தூர் ஸ்ரீமான் C. V. வெள்ளியங்கிரி கவுண்டர் சகோதரர் குமாரத்திக்கும் ஈரோடு மண்டி பிரபல வியாபாரி ஸ்ரீமான் செ. ந. பழனிவேலப்ப கவுண்டர் குமாரர் ஸ்ரீமான் சுப்பராய கவுண்டருக்கும் இம்மாதம் 27-உ. வெள்ளிக்கிழமை வெள்ளக்கிணற்றிலும் முடக்குருச்சியிலுமாக வெகு விமரிசையாய் விவாகம் நடந்தேறியது.

## பிராமணீயத்தை ஒழித்தவர்கள்

(முன் தொடர்ச்சி.)

திருவாளர்கள்

23. ஷண்முகானந்த சுவாமிகள், யோகானந்த ஆசிரமம், சென்னை.
24. நாகப்ப சுவாமிகள், பழைய குற்றாலம் சாரல், ஆயிரப்பேரி. தென்காசி.
25. கே. விஸ்வநாத மேனன், "ஜஸ்டிஸ்" ஆசிரியர், சென்னை
26. சு. பழனியப்ப செட்டியார், மலபார் தீப்பெட்டி தொழிற்சாலை சொந்தக்காரர், பாலக்காடு.
27. கந்தசாமி பிள்ளை, காங்கிரஸ் காரியதரிசி, சேலம்.
28. குப்புசாமி நாயுடு, கோட்டை, சேலம்.
29. ரெ. ராமாநுஜ நாயுடு, மளிகை, கீழ வாசல், தஞ்சாவூர்.
30. மா. பரமசாமி பிள்ளை, தெற்குத் தெரு, சோழவந்தான்.
31. ச. வீராசாமி, பென்ஷனர், தெற்கு கம்மாளர் வீதி, மன்னார்குடி.
32. ப. கிருஷ்ணசாமி பிள்ளை, நெய் வியாபாரம், கோயமுத்தூர்.
33. க. சோமசுந்தரம், ஆசிரியர், காரங்குளம், ஸ்ரீவில்லிபுத்தூர்.
34. ஆர். என் சுப்பையா கவுண்டர், பஞ்சாயத்து கோர்ட்டு தலைவர் ஜில்லா போர்டு அங்கத்தினர் ராமச்சந்திரபுரம்.
35. எ. ஆர். சிவானந்த முதலியார் செல்லாண்டியம்மன் கோவில், கடப்பள்ளி. P.O (திருச்சி ஜில்லா)
36. சே. சபாபதி பிள்ளை, (ரிட்டயர்ட் ஹெல்த் இன்ஸ்பெக்டர்) 1. மாப்பிள்ளை நாய்க்கன் குளத்தெரு, திருச்சி.
37. தி. ப. நாராயணசாமி பிள்ளை, ஷாப், மிராஸ்தார், பெரியகடை வீதி, திருச்சி.
38. டி. ஜே. மநாரநாயகம் பிள்ளை, (பென்ஷன் மெடிக்கல் ஆபிசர்) 17, சுண்ணாம்புக்காரத்தெரு திருச்சி.
39. ஜே. எஸ். நடராஜ பிள்ளை, நடராஜ பிரஸ் சொந்தக்காரர், திருச்சி.
40. வீ. அருணாசலம் "சமத்துவ ஊழியன்" ஆசிரியர், கொழும்பு.
41. சு. கணபதி, மாஜி "தேசபக்தன்" மானேஜர், கொழும்பு.
42. மு. ராமய்ய பிள்ளை, பரிமளவேணி கம்பெனி சொந்தக்காரர், 3:வது குறுக்குத்தெரு, கொழும்பு.
43. சி. கோ. நரசிம்மலு நாயுடு, 57 ஜாபர் சாயபு தெருவு, திருச்சி.
44. தி. மு. பானுசாமி நாயுடு, 67 ஜாபர் சாயபு தெருவு, திருச்சி.
45. க. கிஞ்சப்ப கவுண்டர், கன்செய்ப்புளியம்பட்டி (கோவை ஜில்லா.)
46. வி. மு. சிங்காரவேல் தேசிகஸ்வாமி, காரியதரிசி, திராவிடசாது மகா சங்க வித்தியாப்பியாசபீடம், 6. சிமெட்டெரி ரோட், சென்னை.
47. எம். ஜி. சுப்பையா செட்டியார், வர்த்தகம், திருவாரூர்
48. எம். ஆர். கோபால்சாமி நாயுடு, நகுநீலித் தெரு, திருச்சி,
49. டி. முத்துகிருஷ்ண நாயுடு, கல்லுக்காரத் தெரு, திருச்சி.
50. மே. வே. துரைசாமி உடையார், "தெய்வீகன்" ஆசிரியர், திருச்சி தாலூகா காங்கிரஸ் காரியதரிசி. மேலநற்கண்டார் கோட்டை, திருச்சி.
51. தர்மமும் நல் கே. சி. வீரப் பிள்ளை, பென்ஷன் ஓவர்சியர், பெரிய செட்டி தெரு, உறையூர், திருச்சி.

## பஞ்ச ரத்தினம்

திரிசிரபுரம் 'திராவிடகேசரி' திருவாளர் தி திரவியம் பிள்ளை அவர்களால் வெளியி டப்பட்ட திராவிடர் முன்னேற்றக் கும்மி' என்ற சிறு புத்தகத்திலிருந்து எடுத்தாளப் பட்டது:—

மானிடரே உயர் பிறவி யென்னும் நூலை
மதியாது அருளின்றி மயக்கங் கொண்டு
நானிவரி லுயர்ந்தவர்களென்று சொல்லி
நாய்கழுதை மாடுபன்றி நடந்து செல்லும்
பூவிலத்தின் வீதிதனில் செல்ல வொட்டா
புறத்தோட்டும் அறிவிலிகள் இந்தியாவைத்
தானிவரோ ஆள்வதற்கு உரியோர் அந்தோ
சகந்தனிலே இவர்கொடுமை சாற்றப்போமோ.

எங்களையும் மனிதராய் நினைந்து மேலாம்
இந்தியரை யாளுந்திரு ஜியார்ஜி மன்னல்
தங்களையே பெரியவராய் மதித்துக்கொண்டு
தம்முடனே பிறந்தோரைக் கீழோரென்று
எங்குமே பறையடித்துக் கொடுமை செய்யும்
இவர்களுக்கு அரசுரிமைக் கொடுப்பீராலைல்
உங்களுக்கும் எங்களுக்கும் தீமை செய்வார்
உலகமெல்லாம் நடுங்கவைப்பா ருண்மைதானே.

கிணறுகுளம் ஆறோடை சுனைகள் தம்மில்
கிட்டவர வொட்டார்கள் நல்ல தண்ணீர்
உணவிடவே மாட்டார்கள் படிக்கவென்றால்
உள்ள பள்ளி தன்னிலே சேர்க்கமாட்டார்
பணமிருந்து வீடுகட்ட வேண்டுமென்றால்
பாம்பாக மதித்தலவோ இடமேதாரார்
குணமில்லா இவர்களுக்கு அரசுவாழ்வு
கொடுத்திடிலோ கொடுத்திடுவோர் கொடியோ
[ரம்மா

## தேவாஞ்சனம்.

சீசா 1-க்கு விலை ரூ. 1—0—0

சித்தியானந்தர் பிரபல கைவல்ய சஞ்சீவி தேவாஞ்சனம் மேல் மூலம் தேய்ப்பதால் கொடி ய ரோகங்களை உடனே நீக்கி குணப்படுத்தும். கேட்டலாக் மருந்துடன் அனுப்பப்படும். சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை யுண்டா கும், 13 வகை ஜன்னி, சீதம், மாந்தவலிப்பு, கை கால் மத மதப்பு, பச்சவாதம், பாரிச வாய்வு, அண்டவாதம். மேகவூறல் வண்டு கடி, முதலிய சகல வியாதிகளைக் கண்டித்து அதி சீக்கிரம் குணமாக்கும். வி. பி. பிரத்தியேகம்.

க. அ. நாராயணசாமி பண்டிதர்,
கிருபா நிதி வைத்தியசாலை,
திருச்செங்கோடு, தென் இந்தியா.

## ஒரு ஒப்பந்தம்.

சுயராஜ்ஜியக் கக்ஷியார் தேவஸ்தான மசோதாவை தோற்கடித்து விட வேண்டிய தென்றும் அப்படித்தோற்கடித்தால் சுய ராஜ்யக்கக்ஷி தேர்தல் செலவுக்கு (பார்ப்பனர் சட்டசபைக்கு வர) மகந்துக்களும் மடாதி பதிகளும் 50000 ஐம்பது ஆயிரம் ரூபாய் கொடுப்பதென்றும், சில மடாதிபதிகளுக்கும் மகந்துக்களுக்கும், சுயராஜ்யக் கக்ஷி தலை வருக்கும் ஒரு ஒப்பந்தம் நடந்திருக்கிறதாம்.

## "குடி அரசு" 18-ம் இதழ்

திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்கள் சென்றவாரம் முழுவதும் சென்னை, கோ லார், பாப்பாரப்பட்டி முதலிய வெளியூர் கட்குப் போயிருந்தமையாலும் இவ்வாரம் பெரிய அச்சிறுத்தும் இயந்திரத்தைப் (சிலிண்டர் மிஷின்) பூட்டி வேலை தொடங் கப் பட்டதாலும் "குடி அரசு" 18-ம் இதழ் வெளிவர ஒருநாள் தாமதிக்க நேர்ந்தமைக்கு வருந்துகிறோம். இவ்வாரமுதல் பெரிய இயந்திரத்திலேயே வேலை செய்யப்படும். ஆதலால் இனி எவ்வித இடையூறும் நேரி டாது என்று நம்புகிறோம்,

## தேவஸ்தான மசோதாவும் கோயமுத்தூர் ஜில்லா பிரதிநிதிகளும்

பார்ப்பனரல்லாதார் தர்ம சொத்து சரி யான வழியில் செலவாக இவ்வாரம் சென்னை சட்டசபையில் நடக்கும் தேவஸ்தான மசோதாவுக்கு ஸ்ரீமான் வெங்கட்டரமணய் யங்கார் எதிரிடையாய் ஓட்டுக் கொடுத் திருக்கிறார். ஸ்ரீமான் டி. எ. இராமலிங்கம் செட்டியார் இதுவரை அநுகூலமாயிருந் திருக்கிறார்.

ஸ்ரீமான் வெள்ளியங்கிரி கவுண்டர் சங் கதி இன்னமும் ஒன்றும் தெரியவில்லை.

## திருநெல்வேலி ஜில்லா மருத்துவகுல முதலாவது மகாநாடு

தென்னிந்தியாவிலுள்ள மருத்துவ குல நன்மக்கள் இழந்துள்ள தங்கள் பண்டை நன்னிலையை அடைவதற்குப் பொது மக்க ளுடைய அன்பையும் ஆதரவையும் அரசி யல் திருத்தத்தின் பயனாக ஏற்பட்டுள்ள உரிமைகளையும் பெற முயலுதற்காக திரு நெல்வேலி ஜில்லா மருத்துவகுல முதலாவது மகாநாடு நாளது வருஷம் செப்டெம்பர் மாத ம் 1, 2, தேதிகளில் திருநெல்வேலி சாலியர் தெரு மருத்துவர் ஸ்ரீ சுந்தர விநாயகர் மட த்தில் சென்னை மருத்துவ ஞாயிறு பண் டித எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளை அவர்க ளின் தலைமையில் நடைபெறும். வரவேற் புக் கழகத் தலைவர் டாக்டர் எஸ். சுந்தரம் எல். எம். பி. அவர்களாகும் என்று மகா நாட்டு காரியதரிசி திரு. தி. முத்துசாமி பண்டிதர் தெரிவிக்கிறார்.

## ஜில்லா போர்டு தலைவருக்கு விருந்தும் வரவேற்பும்.

---

கோயமுத்தூர் ஜில்லா போர்டு தலைவர் ஸ்ரீமான் ராவ் பஹதூர் ஸி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் அவர்களுக்கு 20-8-26 தேதி பெருந்துரை பிற்கா வாசிகளால் ஒரு சிற்றுண்டிக் கச்சேரி நடத்தி வைக்கப் பட்டது. விருந்துக்கு அடியிற் கண்ட கனவான்கள் விஜயம் செய்திருந்தனர். மகா-ள-ஸ்ரீ பொள்ளாச்சிக் கடுத்த ஊத்துக்குளி சமஸ்தானம் குமார ஜமீன்தார் முத்துக் கிருஷ்ணக் காளிங்கராயர் அவர்கள், கோவையிலிருந்து ஸ்ரீமான்களான வி. அருணாசலம் செட்டியார், பி. கிருஷ்ணசாமி பிள்ளை, பழனிச்சாமி நாயுடு, சுப்புபிள்ளை, வெங்கிட்டராஜு முதலியவர்களும் சிவன்மலை கே. சுப்ரமண்ய முதலியார், சென்னிமலை எஸ். கே. ராமசாமி முதலியார், ஈங்கூர் கந்தசாமிக் கவுண்டர், பெருந்துரை பிற்கா வாசிகளில் அப்பர் மடாலயம் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ எம். எ. ஆண்டமுத்துக் கவுண்டர், காஞ்சிக் கோவில் தர்மகர்த்தா அவினாசிக் கவுண்டர் வி. என். ராமண கவுண்டர், பழனிச்சாமிக் கவுண்டர், மணியம் நாகசாமி அய்யர், பி. வி. கணபதி அய்யா, கே. எஸ். ரங்கைய கவுண்டர், ரங்கப்ப கவுண்டர், ஸி. டி. நாராயணசாமி நாயுடு, எ. சீதப்ப முதலியார், சுப்ரமணிய செட்டியார், அப்தல் ரஹிமான் சாயபு, சுப்ரமணிய முதலியார், ஷண்முகம்பிள்ளை, முத்திரங்கசாமிநாயுடு, கரீம்சாயபு, ஸி.கே. நாகப்பமுதலியார், டி. ஆர். முத்துமாணிக்க முதலியார், குருநாத முதலியார், பொன்னுசாமி பிள்ளை, முதலிய கனவான்களும் இன்னும் அநேக கிராமவாசிகளும், உள்ளூர் உத்தியோகஸ்தர்களும் வியாபாரிகளும், நூற்றுக் கணக்காக விஜயம் செய்திருந்தனர். ஜில்லா போர்டு தலைவரையும் ஜமீன்தார் அவர்களையும் பொதுஜன வாசகசாலையிலிருந்து மேளவாத்திய கோஷத்துடன் மாலை 4-மணிக்கு ஊர்வலமாக கோவாபரேடிவ் யூனியன் ஆபீஸ் சுப்ரமண்ய விலாசுக்கு அழைத்து வரப்பட்டதும் எல்லோருக்கும் சிற்றுண்டி வழங்கப் பட்டது. அதன் பின்னர் ஷை ஆபீசுக்கு முன்புரம் அமைக்கப் பட்டிருந்த அழகிய பந்தலில் ஜில்லா போர்டு தலைவருக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுப்பதற்காக ஒரு பொது மஹாநாடு கூட்டப்பட்டது. கூட்டம் கூடியதும் ஸ்ரீமான் ஆண்டமுத்துக் கவுண்டரவர்கள் எழுந்து கனம் குமார ஜமீன்தாரவர்களைக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொண்டார். ஸ்ரீமான் மணியம் நாகசாமி அய்யரவர்கள் ஆமோதித்தார். கனம் ஜமீன்தாரவர்கள் பலத்த கரகோஷத்தினிடையே அவ்வத் தலைமை பூண்டார். ஸ்ரீமான் ஆண்டமுத்துக் கவுண்டரவர்கள் இரு கனவான்களுக்கும் பூமாலையிட்டார். ஸ்ரீமான் கே. ராமப்பாவர்கள் ஆரம்பத்தில் மிக உருக்கமாக தேசிய கீதம் பாடினார். ஆதி திராவிடக் குழந்தைகள் கடவுள் வணக்கம் பாடினார்கள். அதன் பின் ஸ்ரீமான் ஆண்டமுத்துக் கவுண்டரவர்கள் பெருந்துரை பிற்கா வாசிகளின் சார்பாக அடியிற் கண்ட வரவேற்புப் பத்திரத்தை கனம் ஜில்லா போர்டு தலைவருக்கு வாசித்துக் கொடுத்தார். கனம் தலைவரவர்கள் வெகு சுருக்கமான சொல்லில் பெருக்கமான விஷயங்களை அமைத்து சாந்தமும் இனிமையும் பொருந்த உபசாரப் பத்திரத்திற்கு பதிலளித்தார். பின்னர் கூட்டத்திற்கு வரத் தவரிய ஸ்ரீமான்கள் கோபிதாலூக் போர்டு பிரசிடெண்டு கே. என். நஞ்சப்ப கவுண்டர், கொடுமுடி ராமஸ்வாமி அய்யர், சூலூர் சேர்மன் கருப்பணத் தேவர், மணியம் ராமசாமித் தேவர், இன்னும் சில கனவான்களின் தந்திகளும் கடிதங்களும் கூட்டத்தில் படிக்கப்பட்டது. ஸ்ரீமான்களான அவினாசிக் கவுண்டர், ராமண கவுண்டர், எஸ்.கே. ராமசாமி முதலியார், பி. வி. சுப்ரமணிய அய்யர், கே. ராமய்யர், ஆண்டமுத்துக் கவுண்டர் முதலிய கனவான்கள் கனம் இரத்தினசபாபதி முதலியாரவர்கள் தாலூக் போர்டு ஜில்லா போர்டு முனிசிபாலிட்டி முதலிய பொறுப்புள்ள பொது ஸ்தாபனங்களில் தலைமை வகித்து பொது ஜனங்களுக்கு அனுகூலமாக திறம்பட நடத்திய நிர்வாக சக்தியையும், அதை பொது ஜனங்கள் உணர்ந்திருப்பதை, உணர்ந்து ஜில்லா போர்டு தலைமை ஸ்தானத்திற்கு தேர்ந்தெடுத்த ஜில்லா போர்டு மெம்பர்களின் நடு நிலைமைத் திறனையும் வரப்போகும் சென்னைச் சட்ட சபை தேர்தலில் கனம் போர்டு தலைவரும் ஒரு அபேக்ஷகாராக நிற்பதால் அவரை தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டிய பொது ஜனங்களின் கடமையைப்பற்றியும் பிரசங்கம்புரிந்தனர். கடைசியாக எஸ். எ. கணேசன் கனம் ஜமீன்தாரவர்களின் குடும்பத்தின் பூர்விக பெருமை, அவர்களின் தெய்வ பக்தி, தர்மசிந்தை, முதலியவைகளையும் ஜில்லா போர்டு தலைவரவர்களின் சமத்துவ குணங்களையும் பற்றி சிறிது நேரம் பேசிவிட்டு எல்லோருக்கும் வந்தனம் கூறிய பின்பு கனம் ஜமீன்தாரவர்கள் முடிவுரை கூற சந்தன தாம்பூலம் வழங்கி இரவு 8-30 மணிக்கு மஹாநாடு முடிவுற்றது. வரவேற்புப் பத்திரம் அடுத்த வாரம் வெளிவரும். நமது நிருபர்.

தமிழருக்கு அடிமைத்தனம் ஏற்பட்டது பார்ப்பனியத்தை அனுஷ்டிப்பதாலேயே அதை ஒழிக்க தமிழர் முயல்வார்களாக.

ஸ்ரீவில்லிபுத்தூர்
பி. பி. அன்ஸன்
பிஸ்கட் பக்டரி.
குழந்தைகளுக்குத்தந்த ஆகாரம்
அரரூட் பிஸ்கட்.
சிற்றுண்டிக்கு முதன்மை பெற்றது
ரூஸ்பரி பிஸ்கட்.
புஷ்டியைக் கொடுக்கக் கூடியது
பழம் கேக்.
எல்லா முக்கிய இடங்களிலும் கிடைக்கும்.
P. P. & SON,
Cake & Biscuit Factory,
SRIVILLIPUTTUR.

## இந்தியர் கஷ்ட நிவாரண பாங்கு "லிமிடெட்' கோயமுத்தூர்.

---

காப்பு திரவியம்—ரூ. 2,706.
மூல திரவியம் — ரூ. 5,00,000.
வெளிவிடப்பட்டது —ரூ. 69,100,
வசூலிக்கப்பட்டது —ரூ. 43,890.
டிபாசிட்டுகள் ரூ. 62,580-1-0.

---

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி வீதத்திற்கு பெற்றுக்கோள்ளப்படும்.

---

சேவிங்ஸ் பிக்செட் டிபாசிட்டு
இரண்டு வருஷ, கெடுவு வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—10—0
வருஷம் 1-க்கு வட்டி ரூ. 7—8—0
இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

---

பிக்செட் டிபாசிட்டு.
ஒரு வருஷ கெடுவு, வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—9—0
வருஷம் 1-க்கு வட்டி ரூ. 6—12—0
இதற்கு வட்டி 6-மாதங்களுக்கொருமுறையாவதும் வருஷத்திற் கொருமுறையாவதும் கொடுக்கப்படும்.

---

ஷை பாங்கானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருஷ காலமாக ஒழுங்காக நடந்து வருகிறது. நாளது 10-2-16-உ வருஷாந்திரக் கூட்டமும் நடைபெற்றது. இப்பாங்கானது கோயமுத்தூரில் உள்ள இம்பீரியல் பாங்கை தவிர்த்து மற்ற பாங்குகளைப்போல் 100-க்கு நாள் 1-க்கு ஒரு அணாவும், அதற்கும் அதிகமாகவும், அதிகவட்டி வாங்காமலும், புதிய விதிகளுடனும் குறைந்த வட்டிக்கு (அதாவது 100-க்கு, 0—12—0. 1—0—0) ரூபாயிக்கு எவ்வகையிலும் அதிகப்படாமல் ஏழை ஜனங்களுக்கு அநேக சௌகர்யமாகவும் இருப்பதோடு, குறைந்த பங்குகளினாலேயும் மானேஜிங் டைரெக்டர், அவர்களுடைய திறமையினாலும் முயற்சியினாலும், பங்குக்காரர்களுக்கு முதல் வயதிலேயே 100-க்கு ஒரு ரூபாய் வட்டி கொடுக்கப் பட்டிருப்பதும் தவிர ரிசர்வு பண்டு ரூபாய் 2,706 சேர்ந்திருக்கிறது. நாளது வரை யாதொரு போக்குவரத்தி யில்லாமலும் இருப்பதி லிருந்து மானேஜிங் டைரக்டருடைய தீர்க்காலோசனையும், பாங்கின் நல்ல ஸ்திதியையும் காட்டுகிறது. மேலும் அதிகமான பங்குகள் சேர்ந்து ஏராளமான லேவாதேவி நடந்தால் இப்போது கிடைத்த இலாபத்தைவிட அதிக இலாபம் கிடைக்குமென்றும், ஏழைகளுக்கும் பெரிய உபகாரமாக இருப்பதற்கும் கடவுள் கிருபை செய்வாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

குறிப்பு:—

இந்த பாங்குக்கு ஏற்பட்டிருக்கும் டைரக்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி சொந்த பாங்கு நடத்தக்கூடிய சக்தி வாய்ந்த பெரிய பெரிய தனவந்தர்களாகவும், அமையப்பெற்றிருப்பதால் யாவரும் தங்களிடமுள்ள திரவியத்தை டிபாஸிட்டாகவும் பங்குத் தொகைக்காகவும் இப்பாங்குக்கு அனுப்பி உங்களுடைய பணத்திற்கு யாதொரு நஷ்டமின்றி வட்டியுடன் பெற்றுக்கொள்வதோடு, உங்களுடைய திரவிய சகாயத்தினாலும், ஏழைகளுக்கும் சகாயம் செய்த பாக்கியமும் அடைவீர்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை.

ஜி. ராமச்சந்திர செட்டி,
31—5—26. மானேஜிங் டைரக்டர்.

## பிராமணீயத்தை ஒழித்த கதர் கல்யாணம்.

அட்சய-ஞு ஆவணி-மீ 3-உ (19-8-26) வியாழக்கிழமை காலை 10-மணிக்கு மேல் 12-மணிக்குள்ளாக சுப முகூர்த்தத்தில் நாகப்பட்டணம் தேச பக்த சமாஜ மாணவரும், தேசியத் தொண்டருமான ஸ்ரீமான் காளியப்ப தேவர் அவர்களுக்கும், பட்டுக்கோட்டை வழவப்பக்காடு ஸ்ரீமான் ரெங்கசாமி தேவர் குமாரத்தி ஸ்ரீமதி செல்லம் மாளுக்கும் சுத்தமான சம்பூரண கதர் ஆடையுடன் சாஸ்திர சம்பிரதாயம் பிராமணரல்லாதவரைக் கொண்டு வெகு சிறப்பாய் முகூர்த்தம் நடைபெற்றது. அச்சமயம் பிரபல மிராசுதார்களும், வியாபாரிகளும், தேச பக்தர்களும் விஜயம் செய்திருந்தார்கள். கலியாணப் பந்தல் முழுவதும் சுத்தமான கதர் உடைகளாலும் தேசியக் கொடிகளாலும் மகாத்மா காந்தி, தேசபந்து தாஸ், மௌலானா அலி சகோதரர்கள் முதலான தேச பக்தர் படங்களாலும் காகித புஷ்பங்களாலும் அலங்கரிக்கப்பட்டும் அ ழ விமானத்தில் மண மகனும், மணமகளும் வீற்றிருந்து வந்தேமாதரம் என்ற கோஷத்துடன் திருமணம் செய்யப்பட்டது. பந்தல் முன்புறத்தில் ஸ்ரீ பாரத்மாதா உருவப் படமும், சுயராஜ்ஜிய வாழ்வே சுக வாழ்வு என்று எழுதியும் உயரமான கம்பத்தில் தேசீய கொடி ஆனந்தமாய் கண்ணை கவரும்படிக்கு பறந்து கொண்டிருந்தது குறிப்பிடத் தக்கது. மாலை 4-30-மணிக்கு ஸ்ரீ ஷண்முக வடிவேலானந்த சபா ஸ்திரீ பார்ட்டு ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி ராஜா அவர்களால் தேசிய சங்கீத பாட்டுக் கச்சேரியும், இரவு 8-30-மணிக்கு நாகை தேச பக்த சமாஜம் காரியதரிசி ஸ்ரீமான் தண்டாயுதபாணி பாகவதரவர்களால் நந்தனார் சரித்திர கதா காலக்ஷேபமும் நடைபெற்று இரவு 12-மணிக்கு மணமக்களுக்கு, வாழ்த்து கூறி கூட்டம் கலைந்தது.

கா. ரே. கணபதி.

## தேவை.

தமிழில் சொல்வதையும் பிரசங்கிப்பதையும் சுருக்கெழுத்தில் (Short Hand) எடுத்து எழுதக்கூடிய ஒரு தமிழ் சுருக்கெழுத்துக்காரர் தேவை. அவருக்கு ஆங்கிலமும் தெரிந்திருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. தமிழ் சுருக்கெழுத்து எழுதுவதில் கெட்டிக்காரராயும் வாலிபராயுமிருத்தல் வேண்டும். சம்பளத்தைப்பற்றிக் கடித மூலமாய்த் தெரியப்படுத்திக் கொள்ளலாம்.

காரியஸ்தர், "குடி அரசு" ஈரோடு.

தங்க மெடல்களும், அநேக நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்ற

## ராஜவைத்ய ஆஸ்மம்,

சரஸ்வதி விலாசம் பிரஸுக்கு எதிரில்
செவ்வாய்பேட்டை, சேலம்.

மேகரணங்கள், வெள்ளைவியாதி, ராஜபிளவை, கட்டிகள், நீடித்த மூல பவுத்திர வியாதிகளை ஆபரேஷன் இல்லாமல் சௌக்கியம் செய்யப்படும், விபரத்திற்கு எழுதுங்கள்.

ஆயிரக்கணக்கான

## மூல பவுத்ர வியாதி யஸ்தர்கள்

சௌக்கியமடைந்திருக்கிறார்கள்.

ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.

உலகப் பிரசித்திபெற்ற

## மஹா சந்தனாதி தைலம்.

இந்த தைலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தைலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்து வந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக்குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தைலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள்தோறும் வந்துகொண்டேயிருக்கின்றன. இத்தைலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவுன்ஸ். பாட்டல் ரூ. 4-0-0. 12 அவுன்ஸ். பாட்டல் ரூ. 2-2-0. வி. பி. செலவு வேறு.

## சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவுள்ள ஆண்தன்மையை மிகுதிபடுத்துவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரித ஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக் கொடுத்து, தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0 வி. பி. தபாற் செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு திருச்சி

## ஆனந்த குணபோதினி

ஒரு நூதன உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை

பிரசித்த அநுபவஞான சாஸ்திரி இதன் ஆசிரியராய் விளங்குகிறார்.

இத்தகைய நவீன ஸஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை. இது தமிழ் அறிந்த ஒவ்வொருவர் அகத்துள்ளும் புகுந்து நிலவும் உன்னதம் வாய்ந்தது. சித்திரப்படங்களுடன் திகழ்வது. கல்விச் செல்வம், பொருட்செல்வம் பெருகி இன்பம் ஓங்குதற்குரிய வியாசங்களால் ஒளிர்வது. அறிவை விளக்கி உற்சாகத்தைக் கொடுப்பது. நன்னடக்கையும், லௌகீக யுக்தியும், பாஷை ஞானமும், தேசாபிமானமும், ஈசுவர பக்தியும், ஆழ்ந்த யோசனையையும் உண்டாக்கக் கூடியது. எல்லா மதஸ்தர்களுக்கும், எல்லா ஜாதியார்களுக்கும் ஏற்றதாய் நல்ல விஷயங்கள் இருக்கப் பெற்றது. சொல் நயம் மிகுந்து தமிழ் உலகமெல்லாம் ஜொலிக்கும்படியாயிருப்பது "ஆனந்த குணபோதனி" தான். ஆடவர், மகளிர், பெரியோர், சிறியோர், எவர் கையிலும் இப்பத்திரிகையை இனிக் காணலாம்.

இதில் "ஆனந்த தரிசனம்" "பழமொழிக் குறிப்புகள்" "பத்திரிகா சாரம்" "பெண்கள் பக்கம்" "பிரபஞ்ச தரிசனம்" "விகடப் பிரதாபன்" "சென்ற மாதம்" என்ற தலைப் பெயர்களின் கீழ்வரும் ஒவ்வொரு விஷயங்களும் சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய அலங்கார வசனமழையாய் விளங்கும். இப்பத்திரிகையே எவ்விஷயத்திலும் வெகு சிறந்ததென்பதை தங்களுடைய அநுபவத்தில் தாங்களே அறிந்து கொள்ளலாம். ஆனந்த குணபோதினியின் சொற்ப சந்தாவை உற்று நோக்குங்கள். வருஷச் சந்தா ரூபாய் ஒன்றே (ரூ-1) இன்றே எழுதுங்கள், உடனே சேருங்கள்.

தி இராஜகோபால் முதலியார்,
புரோப்ரைட்டர், "ஆனந்த குணபோதினி" ஆபீஸ்,
302, தங்கசாலைவீதி, சென்னை.

சற்குருவே துணை.

# ஸ்ரீ நமசிவாயகுரு தமிழ்சித்த ஆயுள் வேத வைத்தியசாலை, கோயமுத்தூர்.

இக் கோயமுத்தூரிலும் சென்னை முதலான விடங்களிலும் தீராதெனக் கைவிடப் பட்ட கோடிய வியாதிகளை வெகுசீக்கிரத்தில் சவுக்கியம் செய்து அநேக நற்சாக்ஷிப் பத்திரங்களும் பரிசுகளும் மெடல் சங்கிலி முதலியவை பெற்றவரும் ஸ்ரீ நமசிவாய குரு தமிழ் சித்த ஆயுள் வேத வைத்திய சாலை அதிபருமாகிய கோ. ந. முருகைய பண்டிதர் அவர்களால் தயார் செய்யப்பட்டு உலக பிரசித்தி அடைந்து வரும் ஔஷதங்கள்.

## மேக ராஜாங்க மதன விந்தாதி லேகியம்.



மேலேகண்ட மேகராஜாங்க மதன விந்தாதி லேகியத்தை காலை மாலை இரு வேளையாக ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவதினால், 20 வகை மேகத்தை போக்கி தேகத்தை பசும் பொன் போல் செய்வது மன்றி, சிலேற்பனம் 96ம் கிரந்தி, அரையாப்பு, சூலை, க்ஷயம், ஈளை இருமல், மந்தாரகாசம், காமாலை, சோகை, பாண்டு, குன்மம் 8-ம் கிரிச்சனங்கள் 6-ம் வாய்வு 26ம் பித்தம் 40-ம் இலிங்க புற்று, ஸ்திரிகளுக்கு யோனி புற்று, வெள்ளை, மஞ்சள் வெள்ளை, பிர மேகம் சொறி கரப்பான், மேக ஊறல், தண்டில் புண், கண்ட மாலை, மகோதிரம், நீராமை, கவுசி, உள மாந்தை, அஸ்திஜுரம் அஸ்திவெட்டை, உஷ்ண வாய்வு அரோசகம், அன்னத்துவேசம் வாந்தி, விக்கல், கால்கை எரிவு, பெரும்பாடு, எலும்பு புருக்கி நோய், மூல வாயுவு, மூலத்தில் ரத்தம், கிரு கிருப்பு மயக்கம், நித்திரை, ஸ்திரிகளுக்கு கெற்ப நோய் 7ம் ஸ்திரிகள் மலடியாயிருந்தால் கெற்பம், நீரடைப்பு, சதையடைப்பு, துர்மாங்கிச அடைப்பு, சீதக்கடுப்பு, முதலான கொடிய ரோகங்களை சுகப்படுத்தி தேகம் சிவந்து மின்னும் இந்திரியம் இருகி கட்டும் இதை வயோதியர்கள் சாப்பிட்டு வருவார்களானால் ஜீவாதாரநரம்புகள் முருக்கேறி தாது விர்த்தியையும் ஆண்மையையும் உற்சாகத்தையும் தேகாரோக்கியத்தையும் ஆனந்த சுகத்தையும் கொடுப்பதில் இதற்கு நிகரான லேகியம் வேறேயில்லை யென்று உறுதியாய் கூறுகிறேன். ஆண் பெண் யாவர்களும் சாப்பிடலாம் ஒரு தரம் வாங்கி அநுபவிப்பீர்களானால் இதன் உண்மை நன்கு விளங்கும். பத்தியமில்லை.

48-நாள் சாப்பிடக்கூடிய லேகியம்
சேர் 1-க்கு விலை 5-0-0
24-நாள் „ சேர் ½-க்கு விலை 2-8-0
12-நாள் „ சேர் ¼-க்கு விலை 1-4-0
வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

## குணத்திற் சிறந்தது! விலை குறைந்தது!! பரிமளமிகுந்தது!!!

## சர்வ மேகங்களுக்கும் மகா ராஜாங்க சுகந்த பரிமளாதி ஸ்நானத்தைலம்.

மேலே கண்ட சுகந்த பரிமளாதி ஸ்நானத் தைலத்தை ஆண் பெண் யாவரும் ஸ்நானம் செய்து வருவதாலும் நித்தியம் தலையில் தடவி தலைவாரி வருவதினாலும் தீரும் வியாதிகள், மேகம், நீரெரிவு, நீர் எரிச்சல், கிரிச்சனம், க்ஷயரோகம், கண்ணெரிவு, கண் புகைச்சல், கைகாலெரிவு, பிரமேகம், ரணம், கிரந்தி கற்றாழை நாற்றம், அஸ்திஜுரம், அஸ்தி வெட்டை, உள் வெட்டை, தாது நஷ்டம் பித்தத்தாலுண்டாகும் மயக்கம் புண் புரை முதலானவைகளும் குழந்தைகள் முதல் ஆண் பெண் யாவர்களும் தலைக்கு பத மிட்டு வாரி வந்தால், தலையில் மேகத்தினாலுண்டாகும் பொடு அதினால் சகிக்க முடியாத அரிப்புண்டாகி கோதுமை தவிடுபோல் உதிருகின்றதும் மாறிப்போகும். இந்த தைலமானது எங்கள் முன்னோர்களால் கையாண்டு வந்ததும் என் அநுபவத்துக்கு வந்து ஆயிரக்கணக்கான ரோகிகளுக்கு சகல வியாதிகளையும் சவுக்கியப்படுத்தி இருக்கிறேன். மேற்படி சுகந்த பரிமளாதி ஸ்நான தைலமானது யாதொரு நோய் வராமல் பாது காப்பதோடு ராஜ கருவியாகிய மூளைக்கு குளிர்ச்சியையும் கண்களுக்கு பூரண சந்திரன் போன்ற குளிர்ந்த பிரகாசத்தையும் திவ்விய தேஜஸ்ஸையும் ஞாபக சக்தியையும் உற்சாகத்தையும் தேகாரோக்கியத்தையும் கொடுக்குமென்பதில் சந்தேகமில்லை. பத்தியமில்லை.

☞ 24-அவுன்ஸ் கொண்ட சீசா 1-க்கு விலை 5—0—0 ☞ 12-அவுன்ஸ் கொண்ட சீசா 1-க்கு விலை 2—8—0
☞ 6-அவுன்ஸ் கொண்ட சீசா 1-க்கு விலை 1—4—0 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

## வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகை,

மேலேகண்ட கஸ்தூரி வாய்வு குளிகையானது தங்கம், வெள்ளி, முத்து, பவளம் தாம்பிரம் முதலாகியவைகளாலும் உயர்ந்த சரக்குகளாலும் பெரும்பாலும் சாஸ்திர ரீதியாய் மிக்க பிரையாசையுடன் யாவரும் எளிதிலடையும்படி சித்தம் செய்யப்பட்ட இந்த கஸ்தூரி வாய்வு குளிகையை உபயோகித்து வருவதினால் உஷ்ணத்தினாலுண்டாகும் வாய்வு, மாரடைப்பு, இடுப்புவலி, வயற்றுப்பிசம், நீர்கட்டு, பெண்களுக்கு கெற்பப்பையிலுமுள்ள ரணம், அதனால் சீவுண்டாகி வயற்றில் குத்தல். வெள்ளை விழுதல், சகிக்க முடியாத வயற்றுவலி, இவ்வித வியாதிகளுக்கு இங்லீஷ் வைத்தியர்கள் வயிற்றை ஆப்பிரேஷன் செய்து பார்க்காமல் நிவர்த்தி செய்ய முடியாதென்று முடிவு சொன்ன வியாதிகளை அநேகர்களுக்கு எங்களுடைய வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகையினால் நாலு ஐந்து வேளையில் பூரண சொஸ்தப்படுத்தி அதனால் பரிசுகளும் மெடல்களும் சங்கிலி முதலானதும் பெற்றிருக்கிறேன்.

மேல்கண்ட வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகை அற்புத குண முடையன என்பதிற் சற்றும் சந்தேகமில்லை.

☞ 12-மாத்திரை கொண்ட சீசா 1-க்கு விலை 1—4—0 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

உபயோகப்படுத்தும் விபரம் மருந்துடன் அனுப்பப்படும்.

☞ ஏஜண்டுகள் தேவை தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மருந்து கிடைக்குமிடம்:—
**பழனிவேல் பிள்ளை,**
சோல் ஏஜண்டு, பெரிய கடை வீதி, கோயமுத்தூர்.

## மின்சார ரசம்.

### எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது

**மின்சார ரசத்தின் குணம் எப்படி?**

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது

**மின்சார ரசத்தின் விசேஷமென்ன?**

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமுமில்லை. எவ்வித பத்தியமுமில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

**மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?**

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

### ஒரு புட்டியின் விலை ரூ. 2. தபால் செலவு வேறு:

## மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.



இங்கிலீஷ் படிக்க அவலுடன் எதிர்ப்பார்த்திருந்த அன்பர்களே! ஏன் நீங்கள் கவலைப்படுகிறீர்கள்!!

23000 ஜனங்களுக்கு ஆங்கிலம் விரைவில் கற்றுகொடுத்தது

7-ம் பதிப்பு] இப்புத்தகம் ஒன்றேதான்!!! [7-ம் பதிப்பு

7000-பக்கங்கள் கொண்ட முழு கலிகோ பயிண்டு புத்தகம் விலை ரூ. 2. ஸ்ரீராமர் சீதா திருக்கலியாண படமும், பட்டாபிஷேக ஆப்டோன் படமும் உள்ளது.

## "ஆங்கில ஆசான் அல்லது போதினி"

எமது ரிஜிஸ்டர்ட் "லேடி டிரேட் மார்க்கு" போட்டிருக்கும் புஸ்தகம் பார்த்து வாங்குங்கள்!

மோசம் போகாதீர்கள்.




தமிழ் தெரிந்தவர்கள் ஆங்கில பாஷையை ஆசிரியர் இல்லாமலே அதி சீக்கிரத்தில் பணச் செலவின்றி சுய மாகவும், சுலபமாகவும் கற்றுக்கொள்ளலாம். உலக அனுபவத்திற்கு வேண்டிய பல விவகாரங்களின் பதங்களைப் படிப்படியாக நூதன பாட முறைகளுடன் வெளியிடப்பட்டிருக்கிறது. கிராம முன்சிப், கர்னம், கான்ஸ்டேபில்கள், கங்காணியர்கள், பட்லர்கள் முதலிய எல்லா தொழிலாளர்களுக்கும் மிகவும் முக்கியமானது.

23000-காப்பிகள் இது வரையில் செலவழிந்திருப்பதே: இதன் பெருமையையும் இன்றியமையா உபயோகத்தையும் விளக்கிக்காட்டும் எல்லா ஊரிலும் எல்லா புத்தக ஷாப்பிலும் கிடைக்கும். எல்லா விடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலைத் தெருவு, மதராஸ்.



பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

## மஹா சந்தனாதித் தைலம்

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!
வெயில் காலத்திற்கு மிகப்பயனுள்ளது!!

இம் மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் 2-4-0. 6-அவுன்ஸ் 1-3-0

தமிழ் மருத்துவ சாலை,
220 தங்கசாலைத் தெரு, சென்னை



இனம் இனம்!!

## ரகஸ்ய ரத்னம்

அல்லது

வாழ்க்கை நலம் புகட்டும் நூல்.

வைத்திய அனுபவங்கள், வாழ்வின் மர்மங்கள், இரகசியக் குறிப்புக்கள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை விவரங்கள் இல்லற சார சங்கிரகம் ஆகிய பல்வும் அடங்கியது.

விலை இல்லை; தபாற் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபாற் பெட்டி 222, மதரா


கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. இராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.